Y,351:94

வந்தேமாதரம்

மகாவித்வ சிரோமணியாகிய

தேவசேனபதிப் புலவர்

திருவாய் மலர்ந்தருளிய

பெரிய எழுத்து

அமிர்தவல்லிமாலை.

ஒரு விதவைப் பெண்ணின் வீரம்

த்தப் பதிப்பு.

காரைக்குடி

ஸ்ரீமதி மு. மரகதவல்லி அம்மாள்

அவர்களால்

வெளியிடப்பட்டது.

py Right 1934. விலை அணா 5.

அமிர்தவல்லிமாலை.

அமிர்தவல்லி மாலையைப் படிப்பதனால்
உண்டாகும் பலன்

அன்னநடை மாது அமிர்தவல்லி தன்கதையைப்
படித்தார் பதம்பெறுவார் பார்த்திருந்தார் சீர்பெறுவார்
கேட்டார் பதம்பெறுவார் கிட்டநின்றார் சீர்பெறுவார்
பணமில்லா மக்களெல்லாம் பணக்கார ராகிடுவார்
சீர்குலைந்த பெண்களெல்லாம் சிறந்தநல்ல பட்டுடுப்பார்
நகையில்லை யென்று நைந்து வருந்துபவர்
வயிர நகைபூட்டி மனத்தில் மகிழ்ந்திடுவார்
பிள்ளையில்லை யென்று பேராசைப் பட்டவர்கள்
மக்களில்லை யென்று மனதாசைப் பட்டவர்கள்
வாழ்வு குறைந்தவர்கள் மயங்கி விழுபவர்கள்
அமிர்தவல்லி தன்கதையை அன்பாகக் கேட்டாக்கால்
வருஷமொன்று ஆவதற்குள் மகிமைபெற்று வாழ்வார்கள்
வாழ்வு வளம்பெறுவார் மஞ்சன் தனைப்பெறுவார்
செல்வன் தனைப்பெற்று சீர்பெறுவார் பூமியிலே
குழந்தை தனைப்பெற்றுச் கொஞ்சிக் குலாவுவார்கள்
அமிர்தவல்லி மாலைதனை அழகாப் படித்தவர்கள்
அருகிருந்து கேட்டவர்கள் அடுத்தவர்க்குச் சொன்னவர்
காதாலே கேட்டவர்கள் கனிவாகச் சொன்னவர்கள் [கள்
அச்சிலே பதித்தவர்கள் அதற்குதவி செய்தவர்கள்
எல்லோரும் இந்நிலத்தில் இன்பமா வாழ்ந்திடுவார்
பிள்ளையொடு செல்வம் பிணியில்லா நல்வாழ்வு
இஷ்டமுள்ள யாவையுமே இனிதா யடைவார்கள்
செல்வம் பெருகி நிற்கும் செழித்திடுமே வீடெல்லாம்

கவலை பறந்தோடும் கஷ்டமெல்லாம் நீங்கிவிடும்
துன்பம் பறந்தோடும் தோஷமெல்லாம் நீங்கிவிடும்
சந்தோஷ மாகத் தான்வாழ்ந் திருப்பார்கள்

சரஸ்வதி துதி.

தாயே சரஸ்வதியே தட்டாமல் வாருமம்மா
அமிர்தவல்லி தன்கதைதான் அகிலமெல்லாம் தெரிவதற்கு
செந்தமிழில் நான்பாட தேவி நீ அருள்புரிவாய்
அநியாய மாக அமிர்தவல்லிப் பெண்ணணங்கைப்
பாலப் பருவத்திலே பத்து வயதினிலே
மங்கைப் பருவத்திலே வயதுபத்து ஆகையிலே
கலியாணம் பண்ணிக் கருமவினை யென்றுசொல்லி
கணவ னிறந்தவுடன் கன்னியரைச் சீரழித்தார்
ஆணுக் கொருநீதி பெண்ணுக் கொருநீதி
ஆத்தா சரஸ்வதியே அம்மையரே நீர்கூறும்
உன்போல மங்கையரை உருவழித்தார் மேதினியோர்
சேலை உடைமாற்றிச் சீரான பொட்டழித்து
கண்ணுக்கு மையழித்துக் கனத்தநகை கழட்டி
வீதிக்கு வராமல் வீட்டினுள்ளே போட்டடைத்தார்
பார்க்கமனம் தாழவில்லை பார்த்திருக்க ஞாயமில்லை
தாயே சரஸ்வதியே தட்டாமல் வாருமம்மா
அமிர்தவல்லி யென்னும் அழகான பெண்ணணங்கைக்
கோல மழித்த கொடுமைதனைக் கூறுதற்கு
அம்மா கலைவாணி அருளளிக்க வேண்டுமம்மா
உந்த னருளாலே ஒப்பற்ற இக்கதையை
தாயின் அருளாலே தாரணியில் நான்பாட
நாவில் அருள்சுரந்து நாயகியே காருமம்மா
மனதிலருள் சுரந்து வாணி சரஸ்வதியே
ஆற்றுநீர் போலே அழகாகப் பாடுதற்கு

ஊற்று நீர் போலே உயர்வாகப் பாடுதற்கு
நல்ல அருள்புரிந்து நாயகியே காருமம்மா

நாட்டுச் சிறப்பு.

மாத மும்மாரி வானந் தவறாது
தவறுமல் வானமது தான்பொழியும் மாமழையை
மாமழையி னாலே வளங்கள் பெருகி நிற்கும்
வரிகுளங்க ளெல்லாம் இருகண் ணும் கொள்ளாது
தண்ணீர் பெருகித் தத்தளித்து நிற்பனவாம்
தண்ணீர் பெருகி நிற்கும் தாமரைகள் பூத்து நிற்கும்
அல்லி மலர்ந்திருக்கும் அன்னங் குடியிருக்கும்
பறவை குடியிருக்கும் பக்கமெல்லாம் பூஞ்சோலை
வாழை வளர்சோலை வளப்பம் மிகுசோலை
தென்னை வளர்சோலை செல்வம் நிறைசோலை
கமுகு வளர்சோலை காதல் நிறைசோலை
சோலை வளர்ந்திருக்கும் சூரியனார் மேலிருப்பார்
சூடு தெரியாமல் சூழ்ந்திருக்கும் சோலையது
வெளிச்சம் தெரியாமல் மேவி நிற்கும் சோலையது
ஆணோடு பெண்களெல்லாம் அழகாகக் கூடிவந்து
வெய்யில்முகங் காணுமல் வீற்றிருக்கும் நற்சோலை
சோலைகளி னூடே தோன்றுவார் பெண்களெல்லாம்
வந்துதண் ணீரெடுப்பார் மலர்ந்த திருக்குளத்தில்
மலர்ந்திருக்கும் புஷ்பங்களை வாலிபர்கள் தான்பறிப்பார்
மிதப்பு மரம்போட்டு வேண்டுமட்டும் தான்பறிப்பார்
தண்ணீர்மொள்ளும் பெண்களுக்குத் தாராளாக் கொடுப்பார்
மாதர்முகம்போல மலர்ந்திருக்கும் தாமரைப்பூ [கள்
செவ்வாய் இதழ்போலத் தேன்சொரியும் அல்லிமலர்
மாதர் மனம்போல மாசற் றிருக்குமலர்
அந்த மலரையெல்லாம் ஆணழகர் தான் பறிப்பார்

நீல மலர்பூத்து நீண்டவிழிச் சோதிவிடும்
காவி மலர்பூத்துக் கண்ணழகு தான்காட்டும்
அன்னங்கள் வந்து அங்கே நடைபழகும்
மயிலினங்கள் வால்விரித்து வந்து நடனமிடும்
குயில்கள் மரம்பெயர்ந்து கூவிக் குரல்காட்டும்
கண்டு மனங்குளிர்ந்து கன்னியர்கள் செல்வார்கள்
பாளை கமுகீனும் பலாமரத்தில் தேன்சொரியும்
தென்னங்காய் தானுதிர்ந்து தீங்கமுகின் குலைசாய்க்கும்
பாக்குக் குலையுதிரும் பக்கமெல்லாஞ் சோதிவிடும்
வாழைக் குலைபழுக்கும் வார்த்துவரும் தேனூற்று
மாங்காய் குலையசையும் வான்கமுகு முத்தமிடும்
தேங்காய் குலையசையும் தேங்கமுகு முத்தமிடும்
கொய்யாப் பழங்கள் குலைகுலையாக் காய்த்திருக்கும்
மங்கையரின் தன்மூலையை மறக்கும் படிசெய்யத்
தலைகீழாத் தொங்கித் தவஞ்செய்யும் மாதுளைகள்
எலுமிச்சை நாரத்தை இலைதெரியாக் காய்காய்க்கும்
சோலைகளின் தன்சிறப்பைச் சொல்ல முடியாது
சோலை ஒருபுறமாம் சொல்லும்வயல் நாற்புறமாம்
நாவுக் கடங்குமோ நாடெல்லாம் நஞ்சை நிலம்
தரிசு கிடையாது சாவி கிடையாது
காவேரித் தண்ணீரால் காய்க்குமாம் நெற்குலைகள்
ஆளுயரம் நெல்வளர்ந்து அதன்மேலே நெற்குலைகள்
தலையை நிமிர்ந்து தான்வளர்ந்து சாய்ந்திடுமாம்
பயிருள்ள காலத்தில் பார்க்க முடிந்திடுமோ
கண்கொண்ட தூரமட்டும் காணுமே பச்சை நிறம்
பச்சைப் பசுமையாய்ப் பரந்திருக்கும் சோழனிலம்
சோழனது தேசமெலாம் சுத்தபச்சை யாயிருக்கும்
காவேரி நீரெல்லாம் கழனியிலே பாய்ந்துவரும்

வயல்வயலாப் பாய்ந்து வந்துவிழும் காவேரி
காவேரி வண்டலினுல் கக்குமாம் நெற்பயிரை
வளர்ந்ததொரு நெற்பயிர்கள் வாரிமுத்தை வீசிவிடும்
தாளொன்றில் ஆயிரம்நேல் தான்காட்டிச் சாய்ந்திடுமாம்
நெல்லின் கதிர்முற்றி நேரே தலைசாயும்
அரிதா ளறுத்துவர மறுதாள் பயிராகும்
அரிதாளின் மீழே ஐங்கலத்தேன் கூடுகட்டும்
செல்வம் நிறைந்திருக்கும் செம்மை மனிதரைப்போல்
பெருமை சிறிதுமின்றிப் பேணித் தலைவணங்கி
நெற்குலைகள் எல்லாம் நிலநோக்கிச் சாய்ந்திருக்கும்
கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும்
சோழர் திருநாடு சோறளிக்கும் நன்னாடு
வயல்கள் நிறைநாடு வளமுள்ள நன்னாடு
பஞ்சங் கிடையாது பசியோ கிடையாது
கஞ்சியில்லை யென்று கலங்குவா ரில்லையங்கே
சோறில்லை யென்று துடிப்பா ரொருவருண்டோ
தெருவில் பரதேசி கிரியக் கிடையாது
பிச்சை யெடுப்போர் பேசக் கிடையாது
ஆண்டி பரதேசி ஆருமில்லை அந்நாட்டில்
எல்லாருந் தொழிலாளி எல்லாரும் விவசாயி
எல்லாரும் படிப்பாளி எல்லாரும் பேரறிஞர்
கல்வியில்லா மக்களைக் காண முடியாது
படிப்பில்லா மக்களைப் பார்க்க முடியாது
துணியில்லை யென்று துடிப்பா ரொருவருண்டோ
ஆடையில்லை யென்று அழுவா ரொருவருண்டோ
கண்ணீ ரறியாமல் கவலையொன்று மில்லாமல்
வருத்த மறியாமல் மாஜனங்கள் வாழுமூர்
துன்ப மறியாமல் துக்கம் அறியாமல்

இன்பம் பெருகி எல்லோரும் வாழ்ந்திருந்தார்
சந்தோஷமாக ஜனங்களெல்லாம் வாழ்ந்திருந்தார்

நகரச் சிறப்பு.

சோழ வளநாட்டைச் சோழமன்ன ராண்டிருந்தார்
சோழமன்னர் ஆளுதற்குத் தோதான பட்டணமாம்
காவேரி தண்கடலில் கலக்குங் கரைதனிலே
கடலோடு காவேரி கலக்கும் துறைதனிலே
அழகான பட்டணத்தை அமைத்தாரே சோழரவர்
பூம்புகார் என்றதொரு புகழான பட்டணத்தை
கடலின் கரையினிலே காவேரி ஓரத்திலே
அழகாகத் தானமைத்து அரசு நடத்துகிறார்
காவிரிப்பூம் பட்டினத்தைக் கண்டா ரதிசயிப்பார்
சோழரது பட்டினத்தைச் சொல்ல முடிந்திடுமோ
பட்டினமாம் பட்டினமாம் பாருயர்ந்த பட்டினமாம்
கடலின் கரையினிலே காவேரி ஓரத்திலே
அமைந்ததொரு பட்டினத்தின் அருமை சிறிதாமோ
தெற்கு வடக்காகச் செல்லு மிருகாதம்
கிழக்கு மேற்காகக் கிடக்குமொரு முக்காதம்
இருகாத தூரமட்டும் இருக்குமந்தப் பட்டினந்தான்
முக்காத தூரமட்டும் முடியுமந்தப் பட்டினந்தான்
பள்ளித் தெருவென்பார் படிப்பு மிகுந்தவிடம்
பள்ளிக்கூ டங்களெல்லாம் பரந்து மிகுந்திருக்கும்
ஆரம்பப் படிப்பும் அதன்மேற் கணக்குகளும்
இலக்கியமும் இலக்கணமும் இனிதான கற்பனையும்
பதினெட்டுப் பாஷை பயிலுகின்ற மாதிரியும்
கைத்தொழிலும் வாணிபமும் கனத்த கடல்நாலும்
வானசாத் திரமுடனே வாகடமும் சோதிடமும்
போர்நூல் பொறிநூல் புகழ்பெரியோர் நற்சரிதம்

கற்பிக்கும் சாலைக்குக் கணக்குண்டோ பட்டினத்தில்
பத்தா யிரம்தொழில்கள் பட்டினத்தில் பார்த்திடலாம்
தொழில்சாலை தன்பெருமை சொல்ல முடிந்திடுமோ
புகைபோக்கி போகும் புகையறிவார் யாருமுண்டோ
வானத்தைக் கீறி மாயமாய்ப் போகுதங்கே
ஆகாசங் கீறி அப்பாலே போகுதங்கே
பருத்தித் தொழிலும் பஞ்சு நூற் குந்தொழிலும்
ஆடை நெசவுதொழில் அழகான சாயவேலை
பட்டுத் தொழிற்சாலை பந்திபந்தி யாயிருக்கும்
சரிகைத் தொழிலெல்லாம் தகதகென மின்னி நிற்கும்
பீதாம் பரம்நெய்யும் பெருஞ்சாலை மெத்தவுண்டு
வெள்ளித் தொழிற்சாலை வெண்கலத்தின் நற்சாலை
பித்தளைச் சாமான்கள் பெருக்குந் தொழிற்சாலை
ஈயத்தி னாலே என்னென்ன சாமான்கள்
செம்பாலே செய்யும் தேவையுள்ள சாமான்கள்
கல்லாலே சட்டிசெய்யும் கனமான சாலையங்கே
இரும்படிக்கும் சாலைகளை எண்ண முடிந்திடுமோ
ஆயுத சாலை அடங்காத சாலையது
தங்க நகைசெய்யும் சாலையொரு ஆயிரமாம்
வயிரத்தைப் பட்டையிடும் வாளிலொரு ஆயிரமாம்
நவரத் தினநகைகள் நாலாயிரவர் செய்வார்
ஈத்திர வேலைசெய்யும் சீரான சாலைகளும்
சிற்பத் திறன்காட்டும் திறமான சாலைகளும்
படமெழுதும் சாலைகளும் பார்த்தார் மயங்கிடுவார்
உலாவு மிளஞ்சோலை ஓரா யிரமுண்டு
செய்த சிறுசோலை சிறப்பான நற்சோலை
ஆணோடு பெண்களெல்லாம் அங்கே நிறைந்திருப்பார்
காதல் கமழ்ந்து கனியுந் திருவாயால்

காதலர் தம்முடனே கன்னியர்கள் பேசிடுவார்
குயிலும் பெடையும் கூடி மகிழ்வதுபோல்
அன்றிலும் அதன்பிணையும் அணைந்து மகிழ்வதுபோல்
கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டுக்
களங்கமிலாக் காதலர்கள் களித்து மகிழ்வார்கள்
களவு கிடையாது கள்ளஞ் சிறிதுமில்லை
பொய்யில்லாக் காதலர்கள் போந்திருப்பார் தாராதரமாய்
சோலைக் கிளிகளுடன் சொகுசா யமைந்திருப்பார்
மயிலாடுங் காட்சியொடு வண்ணம் சரிபார்ப்பார்
தோகை மயில்வந்து சொந்தமெனக் கொண்டாடும்
ஒக்கப் பிறந்த ஒருவயிற்று மக்களைப்போல்
மயிலுங் குயிலும் வண்ணப் புறுவினமும்
மாத ரருகில்வந்து வன்னவிளை யாட்டயரும்
துறைமுகத்தின் செல்வமது சொல்லுக் கடங்குவதோ
காவிரிப்பூம் பட்டினத்தின் கனத்த துறைமுகத்தில்
காவேரி தண்கடலில் கலக்குமொரு கரையினிலே
நாழிகை யொன்றுக்கு நானூறு கப்பல்வரும்
கப்பல் துறைபிடிக்கக் காத்திருப்பார் மக்களெல்லாம்
ஏறுவார் இறங்குவார் எத்தனையோ ஆயிரம்பேர்
இறங்குவார் ஏறுவார் எண்ண முடிந்திடுமோ
பாய்மரம் சுருட்டிப் பக்கம் சரிபார்த்துக்
கரைபிடித்த கப்பல்தனைக் கண்டா ரதிசயிப்பார்
கப்பலிலே வந்திறங்கும் கனமுள்ள ரத்தினங்கள்
தோணியிலே வந்திறங்கும் துடிப்பான ரத்தினங்கள்
வயிரம் மரகதமும் வாகான நீலரத்னம்
முத்துடனே மாணிக்கம் மோகமுள்ள ரத்தினங்கள்
எண்ணற்ற ரத்தினங்கள் ஏற்றிவரும் கப்பலிலே
மங்காத ரத்தினங்கள் வகைவகையா யேற்றிவரும்

தங்கத் தகடுகளும் சதுரான கம்பளமும்
சினத்துச் சாமான்கள் திறமான சாமான்கள்
கப்பல் நிறைந்துவரும் காண முடிந்திடுமோ

வாலிபர் பெருமை.

கால்பந்து கைப்பந்து கனத்தபந்து ஆடுமிடம்
விளையாட்டுக் கூடங்கள் மிகுந்திருக்கும் பட்டினத்தில்
பந்து பயிலுமிடம் பாவையர்கள் ஆடுமிடம்
சிலம்பம் பழகுமிடம் சிறுகரடிக் கூடங்கள்
கத்தி விளையாட்டு கனத்த விளையாட்டு
குஸ்திப் பந்தயங்கள் குணமான பஸ்கியுடன்
தண்டா லெடுப்பதுவும் தாவிக் குதிப்பதுவும்
நீந்திப் பழகுவதும் நெடுந்தாரம் ஓடுவதும்
மேனி வளைவதுவும் மேலேறி ஆடுவதும்
பல்லாற் பினமரத்தைப் பற்றிப் பிடுங்குவதும்
யானை தனைத்தூக்கி வானத்தில் வீசுவதும்
இரும்புச் சதையும் உருக்கினுல் நரம்புகளும்
வயிரத்தால் எலும்புகளும் வாய்த்திருந்தார் வாலிபர்கள்
மாற்றரசர் சண்டையென்று வாயா லுரைப்பாரோ
சோழநா டென்றுல் தொடையாடும் மன்னவர்க்கு
வாலிபரைக் கண்டால் வாயில்எச்சில் ஊறுது
சோழனுடன் சண்டையென்று சொல்ல அரசருண்டோ
சோழனது நாட்டினிலே எல்லாரும் பட்டாளம்
வாலிபர்கள் யாவருமே வளமுள்ள பட்டாளம்
தேசமெல்லாம் போர்வீரர் திரண்டிருக்கும் நாளினிலே
மாற்றரசர் சண்டைதனை மனத்தில் நினைப்பாரோ

சோழராஜன் அரசாண்டது.

சோழமன்னன் ஆண்டதைப்போல் தொல்லரசர் ஆண்ட
[திலே

இப்படிக்கு ஆண்டவர்கள் எங்குமில்லை என்றுசொன்னார்
சோழனது பெருமை சொல்லத் தரமாமோ
ஆயிரம் நாவு படைத்தாலும் ஆகாது
பூலோக முண்டான பின்புவந்த ராஜாக்கள்
கோடானு கோடியுண்டு கொற்றவனார் ராஜாக்கள்
ஆரு மரசிருந்து ஆண்டதில்லை இப்படிக்கு
எவரு மரசிருந்து இப்படியே ஆண்டதில்லை
சோழனது ராச்சியம்போல் சொல்ல முடிந்திடுமோ
அவனுடைய சீமையிலே அத்தனையும் ராஜாக்கள்
மன்னனது சீமையிலே மனிதரெல்லாம் ராஜாக்கள்
கவலையில்லா ராஜாவாக் காணுமூர் சனங்களெல்லாம்
ஏழையில்லா ராசாவா யிருக்கிறூர் சனங்களெல்லாம்
சண்டை கிடையாது சலிப்பு கிடையாது
கவலை கிடையாது கருப்புக் கிடையாது
பஞ்சங் கிடையாது பசியுங் கிடையாது
கல்வி குறைவில்லை கருணை குறைவில்லை
செல்வங் குறைவில்லை சீருங் குறைவில்லை
அழுவா ரொருவரில்லை அழகான அந்நாட்டில்
கண்ணீர் வெளிவந்து கண்டா ரெவருமில்லை
சிரிப்பில்லா வாயைத் தெரிந்தா ரொருவரில்லை
வியாதி வருவதில்லை மேனி குறைவதில்லை
வற்றிய மேனி மனித ரொருவ ரில்லை
தலைவலி யென்று தரையிற் கிடப்பதில்லை
நோய்வந்த தென்று நொந்தா ரொருவரில்லை
பஞ்சை பனதியில்லை பரதேசி யாருமில்லை
திருட ரொருவரில்லை தீமைசெய் வாருமில்லை
பெண்டு பிடிக்கும் பித்த ரொருவரில்லை
கஞ்சிக் கலையும் கபோதி யாருமில்லை

பொய்பேசு மக்கள் பொருந்தாரே அந்நிலத்தில்
படியாத மனிதர்களைப் பார்க்க முடியாது
ஆணோடு பெண்கள் அடங்கலும் படித்திருந்தார்
கல்வி குறைவில்லை காசு குறைவில்லை
செல்வங் குறைவில்லை சீருங் குறைவில்லை

சோழராஜ்யத்தில் பஞ்சம் வந்தது.

இப்படியாக இருக்கின்ற நாளையிலே
ஓர்நாள் நடுப்பகலில் உதிர்ந்ததே நட்சத்திரம்
நெருப்புப் பிடித்ததங்கே நீண்டதொரு மாளிகையில்
வானங் குமுறியது மழைத்துளி வீழாமல்
இடிகள் விழுந்ததங்கே எண்ண முடியாமல்
மேகங் கறுக்கவில்லை மின்னுதே வானமெலாம்
சூரு வளியடித்துச் சுழட்டுதே கப்பல்களை
காற்றுப் பெருத்ததுகாண் கண்ணுமண்ணுங் கொள்ளா
தரையிலுள்ள மண்ணையெல்லாம் தள்ளுதே சூருவளி[மல்
பூமியின் மண்ணையெல்லாம் பெயர்க்குதே சூருவளி
மணலெல்லாம் மேலெழும்பி வானந் தெரியாமல்
வீதி தெரியாமல் வீடு தெரியாமல்
பாதை தெரியாமல் பண்ணுதே கோட்டாலை
மண்மாரி யாகி வளமெல்லாங் கெட்டதையா
சோலை பெயர்ந்து சுழலுதே மரங்களெல்லாம்
கடலுங் கொதிக்கிறது கப்பல் தவிக்கிறது
பாய்மரமும் சேலைகளும் பஞ்சாய்ப் பறக்குதங்கே
கடலிலுள்ள மணலெல்லாம் கரையினிலே தள்ளுதங்கே
கப்பல்வந்து சேரும் கரையெல்லாம் பாழாச்சு
தோணிவந்து சேரும் துறையெல்லாம் பாழாச்சு
தொழிற்சாலை யெல்லாம் தூளாகிப் போகுதையோ
பொன்வேலை செய்யுமிடம் மண்மூடிப் போகுதையோ

பூந்தோட்ட மெல்லாம் போகுதே மேலுலகம்
வீட்டினுள் ளேயிருப்போர் வெளியில்வரக் கூடவில்லை
வீடு விழுகிறது வெள்ளிடியின் கொடுமையினால்
பார்த்தான் தலை நிமிர்ந்து பாராளும் சோழமன்னன்
என்னடா ஆபத்து இங்கே நிகழ்ந்ததென்றான்
மந்திரிகள் கோட்டைவிட்டு வந்தாரே மன்னனிடம்
என்ன கொடுமைதனை இழைத்துவிட்டோ மிப்பொழுது
ஆபத்து வந்தவிதம் அறிந்தீரோ மந்திரிகாள்
துன்பம்வந்த மாதிரியைச் சொல்லுமென்றான் மன்னவ
ஏதுமறி யோமையா இந்த அநியாயம் [னும்
கேட்டதில்லை பார்த்ததில்லை கேட்க முடிந்திடுமோ
நம்முடைய ராச்சியத்தில் நடந்ததுண்டோ அநியாயம்
மனிதரெல்லாம் நீதி மன்னரா வாழுகிறார்
அநியாயம் செய்ய ஆளுண்டோ நம்நாட்டில்
பாலு குடிக்கும் பசுங்குழந்தை முதலாக
பல்லு விழுந்த பருங்கிழவன் தன்வரையில்
வருத்த மடைவதில்லை வாழ்வு குறைவில்லை
செல்வங் குறைவில்லை சீருங் குறைவில்லை
கல்வி நிறைந்த கண்ணுள ரத்தனையும்
படிப்பு மிகுந்த பதவியோ ரத்தனையும்
கொடுமை நடக்கக் குணமுண்டோ இந்நாட்டில்
அநியாயம் எப்படித்தான் இங்கே நடக்குமென்றார்
வேறென்ன காரணங்கள் மேன்மையுள்ள மந்திரியே
வானங் குமுறுதே மழையொன்றும் பெய்யவில்லை
சூரு வளிக்காற்றுத் தூற்றுதே மண்ணையெல்லாம்
நட்சத் திரங்கள் நாட்டி லுதிருவதேன்
காணுத கூத்தெல்லாம் காணுதே இப்பொழுது
இடியும் இடிக்கிறதே இல்லாது செய்கிறதே

என்றுசொல்லி மன்னன் இருகண்ணும் தான்புதைத்தான்
செய்யும் வழியின்றித் திகைத்தார்கள் மந்திரிகள்
மாற்ற வழியின்றி மயங்கினர் மந்திரிகள்
புத்தியுள்ள மந்திரிகள் புத்தியற்று நின்றார்கள்
ஒன்றும் புரியாமல் உட்கார்ந்தா ரவ்விடத்தில்
வெளியிலே போனால் வீழுதே பேரிடிகள்
ஊரில் நடப்பதுதான் ஒருவருக்குந் தெரியவில்லை
அன்று முதலாக அடிக்கும் பெருங்காற்று
நின்ற படியில்லை நீர்ப்பஞ்சம் வந்ததங்கே
மழையோ கிடையாது மன்னனது சீமையிலே
தூற்றல் கிடையாது சோழனது சீமையிலே
தண்ணீர் கிடையாது தவிக்கிறார் மக்களெல்லாம்
காவேரி காய்ந்து கடும்பொட்ட லானதங்கே
மங்காத காவேரி வறண்டு கிடக்கிறதே
கண்டஞ்சச் சோழமன்னன் கலங்கி விழுந்தானே
பார்த்தந்தச் சோழமன்னன் பதைபதைத்துப் போனானே

சோழமன்னன் சாஸ்திரிகளிடம் பரிகாரம் கேட்டது.

ஆடா தாதுவரே அழையுங்கள் சாஸ்திரியை
சாஸ்திரம் படித்த சாஸ்திரியைக் கூப்பிடென்றார்
ஊரிலுள்ள சாஸ்திரிகள் ஒருவர்தப்பக் கூடாது
நாட்டிலுள்ள சாஸ்திரிகள் நாற்பதா யிரம்பேர்கள்
எல்லா ரையுமிங்கே இப்போ தழையுமென்றான்
வந்தாரே சாஸ்திரிகள் வரிசை வரிசையாக
வந்தசாஸ் திரிகளைத்தான் வணங்கினன் மன்னவனும்
தெய்வத்தைப் போலத் திகழுகின்ற சாஸ்திரிகாள்
கடவுளைப் போலக் காசினியைக் காப்பீர்கள்
ஆபத்துக் காலத்தில் அரிய உரைபகர்வீர்
துன்பம் வந்தபோது துன்பந் தவிர்ப்பீர்கள்

இப்பொழுது என்னுடைய சீமை நடுங்கிறதே
கொடுமை தவிர்த்துக் குலத்தை நீர் காக்கவேண்டும்
சீமை தடுத்துத் தேசத்தைக் காக்கவேண்டும்
வறுமை தடுத்து மக்களை நீர் காக்கவேண்டும்
என்றுசொல்லி மன்னன் இருகரமுந் தான்கூப்பி
விழுந்து வணங்கினன் மேனியெல்லாம் மண்படிய
குப்புற விழுந்து கும்பிட்டான் சோழமன்னன்
சாஸ்திரிகள் கூடி சாஸ்திரத்தைத் தான்பார்த்தார்
ஏடு புரட்டி இரண்டுநாள் பார்த்தார்கள்
பார்த்துத் தெளிந்தார் படித்தறிந்த சாஸ்திரிகள்
கண்டு பிடித்தோம் கஷ்டமினி இல்லையென்று
தடவிப் பிடித்தோம் தர்ம வழியதனை
கொடுமை மறைந்துவிடும் கூறுவோம் பரிகாரம்
என்றுரைத்தார் மன்னவனும் எழுதுமென்றான் வேண்டி
பரிகாரம் செய்வதற்குப் பார்த்தாரே நல்லதினம் [யதை
கூந்தற் பனையோலை குருத்தோலை வந்ததங்கே
ஈழப் பனையோலை இருபக்கம் காம்பரிந்தார்
தாழைப் பனையோலை தலைப்பக்கங் காம்பரிந்தார்
எழுதினர் சாமானை எழுத்தி லடங்காமல்
மூவாயிரம் சாஸ்திரிகள் மூனந்து வரையலுற்றார்
நாலாயிரம் சாஸ்திரிகள் நன்று வரையலுற்றார்
ஆறுயிரம் சாஸ்திரிகள் அழகா எழுதலுற்றார்
பத்தாயிரம் சாஸ்திரிகள் பாங்கா யெழுதலுற்றார்
மேகம் வரவழைக்க வேண்டினர் ஒருயாகம்
மழையை வருகவென்று வளர்த்தார் ஒருயாகம்
பாவம் தொலையவென்று பண்ணினர் யாகமொன்று
காற்றுக் குறையவென்று கழறினர் யாகமொன்று
இப்படி யாக எண்ணிலா யாகங்களைச்

செய்யவென்று சொல்லித் தீட்டினர் ஓலையிலே
சோழமன்னன் வாயால் சொன்னவொரு உத்தரவில்
வந்து விழுந்ததே மலையாகச் சாமான்கள்
நெருப்பை வளர்த்தார்கள் நெய்யை வடித்தார்கள்
ஆயிரம் குடம்நெய்யை அப்படியே வார்த்தார்கள்
மண்டி யெரிந்ததுதான் வளர்ந்த பெருநெருப்பு
நாற்பதாயிரம் சாஸ்திரியும் நாற்புறமும் வீற்றிருந்தார்
மந்திரங்கள் சொல்லி வளர்த்தார் நெருப்பதனை
புகையாப் புகைந்து போனதையா தேசமெங்கும்
வான மடங்கவில்லை மழையும் பொழியவில்லை
வெள்ளிடி வீழுகிற விதமுங் குறையவில்லை
மண்டபங்கள் இடிந்து மடமடெனச் சாய்ந்ததுகாண்
கட்டிடங்கள் பெயர்ந்து கடகடென வீழ்ந்தனவே
யாகங்கள் குண்டங்கள் நாச மடைந்தனவே
இறந்தவர் போக இருந்தசில சாஸ்திரிகள்
எடுத்தார்கள் ஓட்டம் எங்குந் திரும்பாமல்
உச்சிக் குடுமி உயரப் பறந்ததங்கே
பூனூல் ஒருபக்கம் பின்னே கிடந்தலைய
பஞ்சகச்ச வேட்டியைப் பற்றினர் கையதனில்
குதிங்கால் குடுமிதட்ட குறுக்கு வழியாக
ஓடின புதுமைதனை உரைக்க முடிந்திடுமோ
உயிரிருந்தாற் போதுமென்று ஓட்டம் பிடித்தார்கள்
மன்னவனும் பார்த்தான் மறையவர் செய்கைதனை
இவராலே யாகவில்லை இனிச்செய்வ தென்னவென்றான்

சோசியர்களிடம் கேட்டது.

ஆரடா சேவகனே அழையுங்கள் சோசியரை
நாட்டிலுள்ள சோசியர்கள் நாடிவர வேண்டுமென்று
எங்கும் முரசறையும் என்றுரைத்தார் சோழமன்னர்

அப்படியே செய்தார்கள் அருமையுள்ள தூதுவர்கள்
சோழியர்கள் எல்லாரும் துருசாக வந்தாரே
வந்து தலைவணங்கி மன்னவர்க்குத் தான்பயந்து
எட்டுநா ளாக இதுவேலை யாயிருந்தோம்
சோழியங்கள் பார்த்தோம் சோழி பெருக்கிஞ்மே
கணக்குப் பெருக்கிக் கண்ணயர்ந்து விட்டோமே
என்னசெய்தும் உண்மை எதுவுந் தெரியவில்லை
பாவம் பெரிதாச்சு பார்க்க விளங்கவில்லை
என்ன செய்வோம் மன்னவரே எங்களைக் காப்பாற்றும்
என்றுசொல்லி வீழ்ந்து எழுந்து நின்றூர் சோழியர்கள்

கோடங்கிக்காரரிடம் குறி கேட்டது.

கோடங்கிக் காரரைக் கொண்டுவா இப்போது
என்றுசொல்லி மன்னவரும் இருந்த பொழுதினிலே
கோடங்கிக் காரரெல்லாம் கூடிவந்து சேர்ந்தார்கள்
மன்னவர்க்குத் தெண்டனிட்டு வார்த்தை உரைக்கலுற்றூர்
அரசே எளியவர்கள் அகோர பாடுபட்டு
இரவு பகலின்றி ஏக்கம் பெரிதாகி
ஊருக்கு வந்த உற்றகுறை காணவென்று
நாட்டுக்கு வந்த நாசத்தைக் காணவென்று
உடுக்கடித்துப் பார்த்தோம் ஒன்றும் தெரியவில்லை
ஓரா யிரம்உடுக்கு உண்டிந்த தேசத்திலே
எல்லாம் கிழிந்து இடருசெய்து போட்டதுவே
ஆயிரம் உடுக்கும் அரைநொடியில் போனதுவே
கிழியா வுடுக்கெல்லாம் கிழிந்து பறந்ததுவே
மன்னிக்க வேண்டும் மகராச ரேகேளும்
துக்கம் அறியாத சோழரே நீர்கேளும்
உடுக்கடிக்கும் நாங்களினி உயிருள்ள நாளளவும்
உடுக்குத் தொடுவதில்லை உறுதிசெய்து விட்டோமே

உடுக்கடிக்கும் தொழிலை ஒருமிக்க விட்டுவிட்டோம்
என்றுரைத்தார் மன்னவனும் ஏங்கி மனஞ்சலித்தான்
என்னசெய்வ தென்று எண்ணமிட்டான் சோழனவன்
வாடி மனந்தளர்ந்தான் வாடும் பயிரதுபோல்
செடியின் கீழ்ப் புல்லதுபோல் செழித்த திருமுகந்தான்
களர்நிலத்துப் புல்லதுபோல் கருகி நிறங்குலைந்தான்
எண்ணுது மெண்ணி யேங்கி மனந்தளர்ந்து
ஆரை அடித்தோமோ அனியாயஞ் செய்தோமோ
கூலி குறைத்தோமோ குறைமரக்கா லிட்டோமோ
பஞ்சை பஞைகளைப் பறக்க வடித்தோமோ
பெண்ணுக்குத் தீமை பிழைகள் நினைத்தோமோ
கன்னியர்கள் தாம்வருந்தக் கண்டுசும்மா போனோமோ
ஏழைக்குத் தீமை எண்ணி யியற்றினோமோ
படித்தவர்க்குத் தீங்கு பாரினிலே செய்தோமோ
குழந்தைகட்குத் தீங்கு கூடியே செய்தோமோ
பள்ளிக்கூ டங்களுக்குப் பாதகங்கள் செய்தோமோ
வழியிலே முள்ளிட்டு வாசல் தடுத்தோமோ
தெருவை யடைத்துத் தீமை புரிந்தோமோ
நான்செய்த பாவம் என்னவென்று தானறியேன்
என்றுமயங்கினன் எழிலான சோழமன்னன்
மயங்கி விழுந்தானே வாழ்வரசன் சோழமன்னன்

சோழதேசம் பட்டபாடு

மழைத்தூற்ற லில்லாமல் வாடுதே தேசமெல்லாம்
தண்ணீர் கிடையாமல் தவிக்குதே தேசமெல்லாம்
பயிர்கள் விளையவில்லை பறவைகள் நாடவில்லை
குடிக்க ஜலமில்லை குருவிகள் நாடவில்லை
தீய்ந்தன பயிர்களெல்லாம் தேச முழுமையுமே
காய்ந்தன மரங்களெல்லாம் கனிகள் கிடையாது

ஏரி குளங்களெல்லாம் நிறைக்கஜலம் கிடையாது
பூமியிற் புல்லும் பூடுங் கிடையாது
நஞ்சை நிலங்களெல்லாம் நாச மடைந்தனவே
பசும்புல் தலைகாணும் பாரெல்லாம் பாழாச்சு
மழையில்லை யென்றுல் மனிதரெல்லாம் பிணமலவோ
கஞ்சிக் கலைகிறார் கனத்ததொரு மக்களெலாம்
சோற்றுக் கலைகிறார் துயரம் பொறுக்கவில்லை
பிள்ளைக்குப் பாலில்லை பேண ஒருவரில்லை
வேளைக்கு வேளை விதவிதமா யுண்டவர்கள்
கூழுக் கலையும் கொடுமைவந்து சேர்ந்ததையா
ஊரெல்லாம் பரதேசி ஒண்டுமிடமில்லையையோ
வீடெல்லாம் பரதேசி விலகுமிட மில்லையையோ
எங்கும் பரதேசி இருக்கஇடம் இல்லையையோ
பெண்டுடனே பரதேசி புருஷ ஜனங்களெல்லாம்
இனியங் கிருந்தால் இறந்து மடிவோமென்று
சொல்லாம லோடுகிறார் சோழராஜன் சீமைவிட்டு
வலசைவாங்கிப் போனர்கள் மன்னர் பரிஜனங்கள்
குடிவாங்கிப் போனர்கள் குடித்தனக் காரரெல்லாம்
அண்டிப் பிழைப்பதற்கு அயல்நாடு சென்றார்கள்
கண்டானே சோழமன்னன் காணச் சகிக்கவில்லை

சோழமன்னன் பாண்டியனிடம் சென்றது

ஒன்றும் புரியவில்லை ஓடினன் தென்மதுரை
வளங்கள் நிறைந்ததொரு மாமதுரைப் பட்டணமாம்
பாண்டிமன்ன ராளும் பாருயர்ந்த பட்டணமாம்
முத்துக் கொழிக்கும் முதுமதுரைப் பட்டணமாம்
மதுரை வளம்பதிக்கு வந்துவிட்டான் சோழனவன்
கோட்டைக்குள் ளேநுழையக் கொற்றவனும் சோழனவன்
வந்து நின்று தூதுவரை வழிவிடென்றான் சோழமன்
[னன்

தூதுவர்க ளோடிப்போய்ச் சொன்னார்கள் பாண்டியற்கு
எங்க ளரசே எழிலான மன்னவனே
நீதி முறைதவரு நெறியுள்ள ராஜாவே
மண்டலத்து ராஜாவே மகிமையுள்ள பாண்டியனே
வடநாட்டு ராஜா வந்திருக்கார் வாசலிலே
சோழவள நாடுடைய தோன்றல்வந்தார் வாசலிலே
காத்திருக்கார் வாசலிலே கடுகவர வேணுமென்றார்
உத்தரவை நோக்கி உள்ளே வருவதற்கு
வழிபார்த்து நிற்கிறார் மகராஜ பாண்டியனே
என்ற வுரைகேட்டு இருதோளும் பூரித்தான்
வரச்சொல்லு மென்றுரைத்து மன்னன் கொலுவமர்ந்
தூதுவர்கள் சென்று சொன்னரே சோழனுக்கு [தான்
சோழ னதுகேட்டுத் துள்ளி வருகிறானே
கொலுமுகத்தைத் தேடிக் கோற்றவனுந் தானடைந்து
பாண்டியனைக் கண்டு பரிவுடனே தெண்டனிட்டான்
சிங்கா தனம்விட்டுச் சீரான பாண்டியனும்
எழுந்து எதிர்கொண்டு இருகரமுந் தான்கூப்பி
கும்பிட்டு வாருமென்று கூட்டித் தழுவினானே
கட்டித் தழுவிக் களிகூர்ந் துறவாடி
சிம்மா சனத்தில் சேர இருந்தாரே
இருவருமாக இருந்தாரே ராஜாக்கள்
சம்பந்தி முகநோக்கித் தனிமதுரைப் பாண்டியனும்
சோழன் முகம்பார்த்துச் சொல்லுகிறான் பாண்டியனும்
எங்கேவந்தீர் என்னசேதி எல்லாஞ் சுகந்தானே
அவசரமாய் வந்ததென்ன ஆள்சேனை இல்லாமல்
இத்தனை தூரம் எதிவந்த காரணமேன்
கடிதங் கொடுத்தாலே காரியங்க ளாகாதோ
ஓலை கொடுத்தால் ஒருநொடியி லாகாதோ

நேரே வரவேண்டி நேர்ந்ததென்ன சொல்லுமென்றான்

சோழன் மயங்கி விழுந்தது

சொல்ல முடியாமல் சோர்ந்து விழுந்தானே
நவில முடியாமல் நாவறண்டு போனானே
சோழன் மயங்கிச் சோர்ந்து விட்டா னன்னேரம்
வீராதி வீரன் வெற்றிப் புகழ்ச்சோழன்
மாற்றரசன் முன்னாலே மயங்கி விழுந்தனன்காண்
சம்பந்தி முன்னாலே தயங்கி விழுந்தனன்காண்
என்ன வயணமென்று ஏது மறியாமல்
பாண்டியன் றன்மனதில் பயம்வந்து சேர்ந்ததுவே
யாரடா செம்பிலே தண்ணீர்கொண்டு வாருமென்றார்
நவரத்னச் செம்பினிலே நல்லஜலம் கொண்டுவந்தார்
வைகை ஜலம்கொண்டு வந்தாரே ஏவலர்கள்
பத்துவித செம்பில் பத்துப்பேர் தாங்கி நின்றார்
கையா லெடுத்துத் தெளித்தானே பாண்டியனும்
ஒருகையில் நீரள்ளி ஊற்றினான் வாய்தனிலே
சோழன் திருவாயில் சென்றதந்தத் தண்ணீரும்
தொண்டை யிறக்கினான் சோழனந்தத் தண்ணீரை
தண்ணீர் குடித்துத் தானெழுந்தான் சோழமன்னன்
பொன்ன சனத்தில் போந்திருந்தார் மன்னரவர்
அரியா சனத்தில் அமர்ந்திருந்தார் மன்னரவர்
என்ன விஷயமென்றான் எழிலான பாண்டியனும்
வந்த வயணமதை வாய்திறக்க வேண்டி நின்றான்

சோழன் தன்னுடைய துன்பத்தைச் சொல்லல்

சோழனும் வாய்குழறிச் சொன்னானே அத்தானேயும்
என்னுடைய நாட்டினிலே ஏதுங்குறை வில்லாமல்
பஞ்சை பனாதி பரதேசி யில்லாமல்
கல்வி குறையாமல் செல்வங் குறையாமல்

தொழில்கள் குறையாமல் சுகமுங் குறையாமல்
ராச்சியத்தை ஆண்டிருந்தேன் ராசாக்கள் தான்மெச்ச
பூமிதனை ஆண்டிருந்தேன் பொல்லாத காலமது
என்னவென்று தெரியவில்லை ஏதும்பிழை செய்யவில்லை
சத்தியத்தைக் கைப்பிடித்துத் தருமத்தைக் கைப்பிடித்து
ராச்சியத்தை ஆண்டு நானிருக்கும் வேளையிலே
நின்ற நிலைதனிலே நேர்ந்ததே இக்கொடுமை
மந்திரிமா ரெல்லாம் மதிமருண்டு போனார்கள்
தந்திரக் காரரெல்லாம் தடுமாறிப் போனார்கள்
எவர்க்கும் விளங்கவில்லை இந்த அநியாயம்
தேசமெல்லாம் பாழாச்சு சென்றூர் குடிகளெல்லாம்
குடிகள் பரதேசிக் கோலம் பூணுயலுற்றூர்
பிள்ளை பரதேசி பெண்டிர் பரதேசி
தாயார் பரதேசி தகப்பன் பரதேசி
தானும் பரதேசி தவிக்கிறூர் மாசனங்கள்
யாவும்பர தேசியென்றூல் இருக்கவொரு ஞாயமுண்டோ
ஆண்டிருந்த ராஜாநான் அழிந்து தொலையவில்லை
மந்திரிகள் தந்திரிகள் மாசேனை குறையவில்லை
சட்டங்கள் திட்டங்கள் தான்மாற்ற மடையவில்லை
எல்லா மிருந்தபடி இருக்கிறது ராச்சியத்தில்
திடீரென்று வந்ததொரு தீக்கொடுமை நானறியேன்
வந்த தொருகொடுமை வகையோ தெரியவில்லை
தேசமெல்லாம் பாழாச்சு செல்வமெல்லாம் பாழாச்சு
தொழிலெல்லாம் பாழாச்சு துறைமுகங்கள் பாழாச்சு
நாடெல்லாம் பாழாச்சு நகரமெல்லாம் பாழாச்சு
வந்த வகையறிய மாட்டா தலைகிறேன்காண்
என்ன கொடுமைதனை யானிழைத்தே னென்றறியேன்
மழையும் பொழியாமல் வான மிடிக்கிறது

சூரு வளிக்காற்று சுழற்றி யடிக்கிறது
காவேரி யாறு காய்ந்து கிடக்கிறது
ஒன்றுப் புரியவில்லை ஓடிவந்தேன் உம்மருகே
தக்க உதவிசெய்யும் தாரரச பாண்டியனே
ஒருநாளும் நான் மறவேன் உத்தமனே இவ்வுதவி
குழந்தையெல்லாம் பட்டினியால் கோவென் றழுகிறது
பாலில்லாப் பிள்ளைகளைப் பார்க்க சகிக்கவில்லை
தாயின் முகம்பார்த்துத் தவிக்கிறதே குழந்தையெல்லாம்
என்னுடைய குடிஜனங்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்
ஒருவேளைக் கூழ்கிடைத்தால் போதுமையா பாண்டியரே
நல்லதொரு யோசனையை நவிலுவீ ரிப்பொழுது
என்று சொல்லிச் சோழமன்னன் ஏங்கிய னந்நேரம்
பாண்டியன் உதவிசெய்வதாக ஒத்துக்கொண்டது
பாண்டியனும் கேட்டான் பரிதாப வார்த்தைகளை
கண்ணீர் பெருகியது கவலைவந்து சேர்ந்ததுவே
சோழமன்னன் வந்து சொன்னதொரு நாளுண்டோ
கஞ்சியில்லா மக்களைக் கண்டதுண்டோ சோழமன்னன்
சோழநில மன்னர் சோற்றுக் கழுவதுண்டோ
நெல்லுக் களஞ்சியமா நிற்கின்ற சோழனிலம்
பஞ்சம் பிடித்ததுண்டோ பாரினிலே சோழனிலம்
என்ன அநியாயம் இந்த அநியாயம்
சொக்கலிங்க மூர்த்தியிடம் தூதுபோய்க் கேட்டுவாறேன்
இப்படி அநியாயம் இருக்கவொரு ஞாயமுண்டோ
வழியுந் தெரியாமல் மர்மந் தெரியாமல்
அக்கிரமந் தான்நடந்தால் ஆள முடிந்திடுமோ
சோழனுக்கு வந்தவிதி பாண்டியற்கு வாராதோ
வளவற்கு வந்தவிதி வழுதியர்க்கு வராதோ [வோம்
நம்முடைய நாட்டினிலே நாளைவந்தா லென்னசெய்

பொழுது விடியட்டும் போகிறேன் சொக்கரிடம்
காரணங்கள் கேட்டுக் கழறுவே னுந்தனுக்கு
சொக்கரிடங் கேட்டுச் சொல்கிறே னென்றுரைத்தான்
இருவரு மாக எழுந்தார்கள் பஞ்சணைக்கு

சோழமன்னன் தூக்கம்வராமல் துன்பப்படல்

பஞ்சணையி லேறினன் பாராளும் சோழமன்னன்
தூக்கம் பிடிக்குமோ சோகம் பிடித்தவர்க்கு
உறக்கமுந் தான்வருமோ உள்ள முடைந்தவர்க்கு
கண்ணும் அயருமோ கவலை பிடித்தவர்க்கு
கண்ணுறக்கங் கொள்ளாமல் கலங்குமுன் சோழனவன்
பஞ்சணையில் மேனி படுத்துக் கிடந்தாலும்
மனதைப் பறிகொடுத்தான் மாண்புடைய சோழமன்னன்
தேசத்து மக்களெல்லாம் சீரழிந்து போகையிலே
பஞ்சணை மெத்தையது பாம்பா யிருக்குதுகாண்
மல்லிகைப் பூவிரித்த மாண்பான மெத்தையது
விரித்த மலரெல்லாம் வீசுதாம் பெருநெருப்பை
சீரான மெத்தையது தேளா யிருக்குதையோ
படுக்க முடியவில்லை பாரளந்த மன்னனுக்கு
எழுந்து சுழலுகிறான் இருக்கமன மில்லாமல்
பக்கஞ் சுழலுகிறான் படுக்கமன மில்லாமல்
மன்ன னுறங்கவில்லை மனக்குழப்பம் மேலாச்சு
அரச னுறங்கவில்லை அகக்குழப்ப மேலாச்சு
சுற்றிச் சுழலுகிறான் சோழமன்ன னவ்விடத்தில்
வேறோர் அறையினிலே மேன்மையுள்ள பாண்டியனும்
சென்று படுத்தானே சிறப்புள்ள பாண்டியனும்
பாண்டிய ராஜன் படுத்தானே பஞ்சணையில்
மகுட முடிராஜன் வளர்ந்தானே பஞ்சணையில்
மல்லிகைப் பூவிரித்த வாகான பஞ்சணையில்

தாமரைப் பூவிரித்த சதுரான பஞ்சணையில்
நீலோற் பலம்விரித்த நிகரில்லாப் பஞ்சணையில்
வந்து படுத்தானே மகிமையுள்ள பாண்டியனும்

பள்ளியறைக்கு ராஜாத்தி வருதல்

படுத்தவொரு நாழிகையில் பாங்கான ராஜாத்தி
பாண்டிய நாடாளும் பார்த்திபன் தன்மனைவி
பாண்டியனுர் தன்மனைவி பாராளும் தேவியவள்
வைத்த வடிபெயர்த்து வருஞ்சத்தம் கேளாமல்
அன்ன மெனநடந்து அங்கே நுழையலுற்றுள்
பாண்டியன் படுத்திருக்கும் பள்ளியறை சேர்ந்தாளே
மயில்போல் நடைபயின்று வந்தாளே மாதுநல்லாள்
மெதுவாக வந்து வீற்றிருந்தாள் பஞ்சணையில்
தூக்கமோ மன்னவரே என்றந்தத் தோகையரும்
முத்துதிரும் வாயால் மொழிந்தா ளொருவார்த்தை
மணியுதிரும் வாயால் மலர்ந்தா ளொருவார்த்தை
அமிர்தம் புகுவதுபோல் அந்த மொழியுரைத்தாள்
தேன்போல் இனித்தமொழி செப்பினுள் ராஜாத்தி
அரசன் உறங்கவில்லை அன்பே எனமொழிந்தான்
அன்புக் கடலில் அணையும் இருதோணி
காதற் கடலில் கலக்கும் இருதோணி
இருவ ரொருவரா யிருக்குமந்தக் காதலர்கள்
இருவ ரிருவரா யிருந்தார்க ளப்பொழுது
காதல் கனிந்த கருத்துள்ள ராஜாத்தி [ருள்
மன்னவரைப் பார்த்து வார்த்தையொன்று சொல்லலுற்
சோழமன்னன் வந்த சேதியென்ன சொல்லுமென்றுள்
மன்னன் கருத்தறிந்து வார்த்தை யுரைக்கலுற்றான்

சோழனுடைய துன்பத்தை ராஜாத்திக்குச் சொன்னது

பெண்ணணங்கே என்றன் பெருமையுள்ள கண்மணியே

பாண்டிய நாடாளும் பதிவிரதைப் பெண்ணரசே
கற்பு நெறிதவறுக் கருத்துள்ள மாதரசே
அழகு விளை நிலமே அன்புக் கடலமுதே
கவலைதனைப் போக்கும் கருத்துள்ள மாதரசே
சோழமன்ன னுக்குச் சொல்லவொண்ணாத் துன்பமது
வந்து புகுந்ததுகாண் வகையறியக் கூடவில்லை
தேசமெல்லாம் பாழாச்சு செப்புந் தரமில்லை
என்ன கொடுமையுண்டோ எல்லாம் நடக்குதங்கே
காலையில் ராஜாக்கள் மாலையில் பரதேசி
காலையில் சோலைகளாம் மாலையிலே பொட்டலங்கே
காலையிலே தஞ்சை நிலம் மாலையிலே மண்மேடு
துறைமுகங்க ளெல்லாம் மறைமுகமாய் போனதங்கே
வீடெல்லாம் மேடாகி சோலையெல்லாம் பாழாகி
நாடெல்லாம் காடாகி நாச மடைந்ததங்கே
சோழமன்னன் வந்து சொன்னதெலாம் கேட்டபின்னர்
புத்தி கலங்கிறது போகும் வழியறியேன்
கோடானு கோடிசனம் குடிதண்ணீரில்லாமல்
கஞ்சி குடிக்காமல் கந்தை கிடையாமல்
வயிற்றுப் பசியாலே மானந் தெரியாமல்
அங்குமிங்கு மாக அலைகிறு ரென்றுரைத்தார்
பச்சைக் குழந்தைகட்குப் பாலில்லை யென்றுரைத்தார்
பாலின்றிச் சாகும் பசுங்குழந்தை மெத்தவென்றூர்
வந்த வகைகாண மாட்டா தலைகின்றூர்
சேர்ந்த வகைகாணத் திண்டாடி நிற்கின்றூர்
என்றுரைத்துப் பாண்டியரும் வங்கித் தலைசாய்ந்தார்
குழந்தைகளைக் கொண்டுவர வேண்டுமென்று ராஜாத்தி சொன்னது.
இரக்கமுள்ள மாதேவி இனியதொரு ராஜாத்தி

பாண்டியனுர் தன்மனைவி பதைபதைத்துப் போனளே
பிள்ளைக் கவலைகொண்ட பேரரசி ராஜாத்தி
மைந்தன் கவலைகொண்ட மாண்புடைய ராஜாத்தி
ஒருபிள்ளைக் காக உற்ற தவமிருப்பாள்
பிள்ளை யில்லையென்று பெருங்கவலை கொண்டிருப்பாள்
ஆயிரம் பிள்ளைகள் ஆகார மில்லாமல்
பதினா யிரம்பிள்ளை பாலின்றிச் சாவதென்ருல்
நூரு யிரம்பிள்ளை நொடிப்பொழுதில் சாவதென்ருல்
நெஞ்சம் பொறுப்பாளோ நேரிழையு மப்பொழுது
வாருநீர் பாண்டியரே வளமழிந்த நாட்டினுக்கு
அத்தனை பிள்ளையையும் அள்ளி வருவதற்கு
பட்டினி கிடக்கிற பாலில்லாப் பிள்ளைகளை
கொண்டு வருவமிங்கே கொடுத்து வளர்த்திடுவோம்
பச்சைக் குழந்தையெல்லாம் பாலூட்டிவளர்ப்பமென்ருள்
மன்னனொரு வார்த்தை வதிலுரைக்க வில்லையப்போ
கண்ணுறக்கங் கொண்டான் கட்டழகன் பாண்டியனும்
கடுமையான நித்திரையைக் கண்டாளே பெண்ணரசி
மன்ன னுறங்குவதை மாதரசி கண்டாளே
மெதுவா யெழுந்திருந்து வேறு படுக்கையினில்
காம்பரிந்த மல்லிகைப்பூ கடுக விரித்ததொரு
மெல்லமளி மேலேறி மீளுள் படுக்கலுற்ருள்
பஞ்சுமெத்தை மீதேறிப் படுத்தாளே மாதுநல்லாள்

பாண்டியன் கனவு கண்டது.

விடியஐந்து நாழிகைக்கு விழித்தானே பாண்டிமன்னன்
உஷத்கால நேரத்தில் உலகாளும் பாண்டிமன்னன்
மதுரைப் பதியாளும் மகராஜன் பாண்டிமன்னன்
எழுந்து முகந்திருத்தி இருந்தானே பஞ்சணையில்
சொக்கர் தனைத்துதித்துச் சொர்ந்து விழுந்தானே

பாண்டியன் தேவி பத்தினியா ளேதுசொல்வாள்
சோர்ந்து விழுவதென்ன சொல்லுமென்றாள் ராஜாத்தி
தீக்கனவு கண்டீரா திகைத்து விழுந்தீரா
பொல்லாக் கனவெதுவும் புத்தியிலே தட்டியதா
சொக்கர் தயவிருக்கச் சோர்வு நமக்கேது
மீனாள் தயவிருக்க மேன்மை நமக்கிருக்க
சோர்ந்து விழுவதற்குத் துக்கம் வருவதற்குக்
காரணங்க ளென்னவென்று கட்டழகி தான்கேட்டாள்
கனவொன்று கண்டேன் கிளைப்பாய் வருகுதுகாண்
என்னசெய்வ தென்று ஏதுமே தோன்றவில்லை
சோழமன்ன னெங்கே துரிசா யழையுமென்றான்
வந்தாரே சோழமன்னன் மனது குழம்புகிறார்
தாக்கம் பிடியாமல் சோர்ந்த முகத்துடனே
கண்கள் சிவந்து கருத்தழிந்து நின்றாரே
வாருமையா சோழ நில மன்னர் பெருமானே
சொக்கரைப் போய்ப்பார்க்க சோலி கிடையாது
இரவு கனவினிலே எல்லாம் முடிந்ததுகாண்
சொல்ல முடியவில்லை துடிக்குதே உடலெல்லாம
நாக்குத் துடிக்கிறது நவில முடியவில்லை
வாயாட்டம் பார்த்தீரா வார்த்தைசொல்லக் கூடவில்லை
கனவிலே சொக்கரவர் கடுகிவந்து நின்றாரே
பாண்டியனே நீர்கேளும் பரிதாபச் சேதிகளை
தீர்க்க முடியுமோ தீரா அநியாயம்
மீனாட்சி அம்மனைப்போய்ப் பாருமென்றார் சொக்கரவர்

மீனாட்சி தன்பப்பட்டது.

அங்கையற் கண்ணம்மை அழகுள்ள மீனாட்சி
தேசத்தை ஆண்ட சிறந்ததொரு மீனாட்சி
பாராளும் மீனாள் பழியில்லா வாழ்வரசி

அரசு முறையாளும் அழகுக் குலதெய்வம்
பட்டுப் புடவையில்லை பஞ்சணை மெத்தையில்லை
ஆபரண மத்தனையும் அடங்கக் கழற்றிவிட்டாள்
தாலி கழுத்திலில்லை தங்கநகை யேதுமில்லை
பூமுடித்த கூந்தலது புழுதி படியுதங்கே
சீவி முடித்த சிறப்பான கூந்தலது
தெருவிற் புழுதியிலே சிக்காய்க் கிடக்குதங்தே
வாரி முடித்த வளமான கூந்தலது
மண்மீது சிதறி வழிந்து கிடக்குதங்கே
சவரி நெடுங்கூந்தல் தரையிற் கிடக்கிறதே
மலர்ந்த திருவிழிகள் வாய்மூடிக் கிடக்கிறது
செந்தா மரைமுகமும் சீர்குன்றிப் போனதுகாண்
வெள்ளைப் புடவையொன்றால் மேனி மறைத்திருந்தாள்
உடலைக் குறுக்கி உள்ளம் மிகவருந்தி
வாயைத் திறவாமல் மக்கள்முகம் பாராமல்
தரையிற் கிடக்கிறாள் சதுரான ராசாத்தி
தலையை நிமிர்க்கவில்லை சாப்பாடு செல்லவில்லை
பட்டினி யாகப் படுத்துக் கிடக்கிறாளே
கணுக்கா லருகினிலே கனமான பொன்விலங்கு
இருகாலைச் சேர்த்து இணைத்துக் கிடக்கிறது
வீட்டுக்கு வெளியே விலக முடியாது
இந்த அநியாயம் யாரையா செய்தார்கள்
மீனாளைப் பார்த்து மேனி நடுங்கியதே
என்னய்யா சொக்கலிங்கம் எங்கள் குலக்கொழுந்தே
மீனாளுக்கு வந்த விதியென்ன சொல்லுமென்றேன்

சொக்கலிங்க சுவாமி வருந்தி யுரைத்தல்

கண்ணீர் பெருகுதங்கே கருணையுள்ள சொக்கருக்கு
மேனி நடுங்குதங்கே மேன்மையுள்ள சொக்கருக்கு

நாவு மடிக்குதங்கே நாதரந்த சொக்கருக்கு
பேச முடியவில்லை பேதளித்து நின்றுரே
சொக்கர்பெருமானே சொல்லு மொருவார்த்தை
நீரே குழம்பினுல் நீணிலத்தா ரென்னசெய்வார்
தெய்வங் குழம்பினுல் தேசமக்கள் என்னசெய்வோம்
மீனுட்கு வந்த விதியென்ன சொல்லுமையா
என்று மிகவருந்தி ஏங்கி நிற்கும் வேளையிலே
பாண்டியரே வாய்திறத்து பகர முடியவில்லை
மீனுள் பெருமைதனை விளம்ப முடிந்திடுமோ
இப்படிக் கோலமுடன் இருக்கிருள் பெண்ணரசி
உலகத்து ஆணெல்லாம் நானென்று நீரறியும்
உலகத்துப் பெண்ணெல்லாம் மீனுளின் தன்பிறப்பு
ஒருபெண் வருந்தினுல் உத்தமியும் வருந்திடுவாள்
பெண்ணுக்குத் தீமைசெய்தால் பேரழகி வருந்துகிருள்
உலகத்துப் பெண்களிலே ஒருபெண்ணும் வருந்தாமல்
மண்டலத்துப் பெண்களிலே மாதொருத்தி வருந்தாமல்
கண்ணீர் வடியாமல் கவலை பழகாமல்
ஆளும் அரசுதான் அழகான தன்னரசு
சோழமன்னன் ராச்சியத்தில் துன்பம் வளருதுகாண்
பெண்ணுக்குத் தீமை புரிகிறார் அந்நிலத்தில்
என்றுசொல்லிச் சொக்கர் இருந்தாரே பேசாமல்
சொக்கர்வாய் பேசாமல் சும்மா இருந்துவிட்டார்
மாற்றும் வழியென்ன வாயுரைக்க மாட்டீரா
போகும் வழியென்ன புகலுவீ ரென்றுரைத்தேன்
ஒன்றும் பதிலில்லை உத்தரங்க ளேதுமில்லை
வாய்திறக்க மாட்டாமல் வருந்தினர் சொக்கரவர்
பெண்ணுக்குத் தீமை பெரிதா நடக்குதென்றார்
மாதுக்குத் தீமை வளருதென்றார் உம்நாட்டில்

அதனுலே மீனுள் அழுது கிடக்கிருளாம்
என்றுரைத்தார் சொக்கர் இருகண்ணும் திறந்தனகாண்
கண்ணே விழித்தேன் கனவென்று தானுணர்ந்தேன்
போகும் வழியென்ன புகலுவீர் மன்னவரே
சொக்கரிடம் போவதிலே துப்புத் தெரிவதில்லே
பெண்ணுக் கநியாயம் பெரிதா நடக்குதென்ரூர்
அநியாயம் நடப்பதைத்தான் அறிந்துவர வேணுங்காண்
நாடெல்லாந் தேடி நாமே தெரிந்திடுவோம்
சொக்கர் திருவருளால் தோன்றுமே உண்மையெல்லாம்
மீனுட்சி தன்னருளால் விளங்குமே சேதியெல்லாம்

பாண்டியராஜன் சபதம் வைத்தல்

அநியாயந் தெரியாமல் அன்னத்தைத் தொடுவதில்லே
துன்பந் தெரியாமல் சோறுதான் உண்பதில்லே
வெற்றி வளவன் விறல் வேந்தர் தம்பிரான்
சோழநில மன்னன் துயரப் படும்போது
நாட்டிலுள்ள மக்களெல்லாம் நல்லுணவு கொள்ளாமல்
பிள்ளேபா லுண்ணுமல் பெரிதும் அலேகையிலே
மதுரைப் பதிவந்து வருந்தி யுரைக்கையிலே
மீனுட்சி பட்டினியால் மெலிந்து வருந்துகையில்
சொக்கர் வருந்திச் சோர்ந்து விழுகையிலே
எனக்கென்ன போசனங்கள் எனக்கென்ன நல்வாழ்வு
ஆரடா சேவகனே ஆளெயெல்லாம் கூப்பிடென்ரூன்
மந்திரி மாரையெல்லாம் வரவழையு மென்றுசொன்னுன்
சேனு பதியெல்லாம் சீக்கிரம் கூப்பிடுங்கள்
மணியகார ரத்தனேயும் வரவழைக்க வேண்டுமென்ரூன்
அவ்வளவு பேர்களும் அரைக்கணத்தில் வந்தார்கள்
மந்திரிகள் தந்திரிகள் மாசேனே அத்தனேயும்
வந்து விழுந்ததுகாண் மன்னனுக்கு முன்னுக

என்ன அரசே எழிலான மன்னவரே
காலைப் பொழுதினிலே கண்விழிக்கும் நேரத்திலே
அழைத்த வயணமென்ன அழகாகச் சொல்லுமென்றூர்
அவசர காரணத்தை அன்பா யுரையுமென்றூர்
யோசனைக்கு நாங்களுண்டு உலகெல்லாம் வெற்றிபெற
மேலோகம் கீழ்லோகம் வேறுமுள்ள லோகங்கள்
பாதாள லோகம் பகட்டான நாகலோகம்
கெந்தருவ லோகம் கீர்த்தியுள்ள பூலோகம்
எந்தலோ கத்தையும் இமைப்பொழுதில் பிடித்திடலாம்
வில்வீரர் வாள்வீரர் வெற்றிக் கதைவீரர்
வாள்யுத்தம் மல்யுத்தம் வகைவகையாக் கற்றவர்கள்
வந்திங்கே நிற்கிறூர் வாட்டிடுவார் உலகமதை
மன்னர் திருவாணை வரவைஎதிர் நோக்குகிறூர்
என்ன விவரமென்று எடுத்துரையு மன்னவரே
அழைத்த வயணமென்ன அரசரே கூறுமென்றூர்

மந்திரிகளுக்கு பாண்டியராஜன் விபரம் சொல்லல்

சண்டையில்லை போருமில்லை தவிக்குதே சனங்களெல்லாம்
மன்னன் வளவன் மகாராஜன் தன்னூட்டில்
அநியாயம் நடக்குதங்கே அண்ட முடியவில்லை
மழைதண்ணீ ரேதுமில்லை வரண்டு கிடக்கிறது
காவேரி யாறு காய்ந்து கிடக்குதங்கே
வீடெல்லாம் தானிடிந்து மேடாகி விட்டதங்கே
கடலோரம் தூர்ந்து கப்பலெல்லாம் பாழாச்சு
மண்மாரி பெய்து வளமெல்லாம் போனதங்கே
கோடைஇடி வானம் குமுறி இடிக்குதங்கே
சூரு வளிக்காற்று சுழட்டி யடிக்குதுகாண்
சோறு கிடையாது துடிக்கிறூர் மக்களெலாம்
பாலு கிடையாமல் பறக்குதே பிள்ளையெலாம்

கஞ்சி கிடையாமல் கலங்குகிறார் மக்களங்கே
ஆண்டி பரதேசி அதிகரித்தார் அந்நாட்டில்
தெருவெல்லாம் பரதேசி திரிகிறார் அந்நிலத்தில்
மன்னன் தயங்குகிறார் மாற்றந் தெரியாமல்
சோழன் தயங்குகிறார் துறையொன்றுங் காணுமல்
வந்து வருந்துகிறார் மார்க்கந் தெரியாமல்
சொக்கர் கனவினிலே தோன்றினர் ரின்றிரவு
மீனுட்சி தன்னுடலே வேண்டிநீர் பாருமென்றார்
படுத்துக் கிடக்கிறாள் பாராண்ட மீனுட்சி
ஆடை புதுமையில்லை அழகு நிறக்கவில்லை
நகையொன்று மில்லாமல் நல்லதுணி யில்லாமல்
தலையும் முடியாமல் சவுரி குலையுதங்கே
வெள்ளைத் துணியொன்று மேனிசுற்றிக் கிடக்குதங்கே
பொல்லாத் துணிகொண்டு போர்த்துக் கிடக்கிறாளே
கண்ணீர் பெருகிக் கடலாகப் பொங்குதங்கே
ஆறுபோற் கண்ணீர் அங்கே பெருகிறது
பார்க்கச் சகிக்கவில்லை பாரளந்தார் தங்கையவள்
வாயோ திறக்கவில்லை மாற்ற முரைக்கவில்லை
மதுரைத் துரைச்சி வருந்திக் கிடக்கிறாள்காண்
சொக்கர் ஒருவார்த்தை சொல்ல விரும்பவில்லை
பார்த்தீரா மன்னவரே பாராளும் மாதிரியை
சோழ னரசாளும் துயரத்தைப் பாருமென்றார்
வேறுசொல் லொன்றும் விளம்பவில்லை மந்திரிகாள்
மற்றுமொரு வார்த்தை வரவில்லை மந்திரிகாள்
ஆத்திரங் கொண்டார் அழகான சொக்கரவர்
மீனுட்சி தனைப்பார்த்து விம்முகிறார் சொக்கரவர்
அரசி தனைப்பார்த்து ஆயாசங் கொள்ளுகிறார்
மங்கை யொருமீனுள் மதுரைத் துரைச்சியவள்

வருந்திக் கிடக்கிறாள் வார்த்தை யொன்றும் பேசாமல்
மயங்கிக் கிடக்கிறாள் மாற்ற முரையாமல்
இந்தக் கொடுமைக்கு என்ன பரிகாரம்
பரிகார மென்னசொல்லும் பாங்கான மந்திரிகாள்
மாற்ற முரைத்திடுங்கள் வாகான மந்திரிகாள்
என்றுரைத்தான் மன்னன் இருந்தார்கள் மந்திரிகள்

மந்திரிகள் சோழதேசத்துக்குப் போய்ப் பார்க்கவேண்டு மென்று யோசனை சொல்லல்

சொக்கர் திருவாயால் சொல்ல முடியவில்லை
மீனாட்சி தன்வாயால் விளம்ப முடியவில்லை
நாங்களென்ன சொல்ல விருக்குதையா பாண்டியரே
சோழனது நாட்டினிலே துன்பம் பெருகிறது
துன்பத்துக்குக் காரணந்தான் தோன்றவில்லை யென்று
மீனாள் கிடக்கிற விஷயம் கருதினுக்கால் [சொன்னீர்
பெண்ணுக்குத் துன்பம் பெரிதா யிருக்குதங்கே
மாதுக்குத் துன்பம் வளருதென்று சொல்லிடலாம்
வளவன் திருநாட்டில் மங்கையர்க்குத் துன்பமையா
மங்கையர்க்குத் துன்பமது வளருதந்த நாட்டினிலே
கண்டு பிடித்திடுவோம் கடுகப் பயணம்வையும்
என்றுரைத்தார் மந்திரிகள் எழிலாக அப்போது
இப்போதே பயணமென்று எழுந்தாரே பாண்டிமன்னர்

ராஜாத்தி தானும் கூடவருவேனென்று கூறுதல்

மன்னன் பெருந்தேவி வளமுள்ள மாதரசி
பட்டத்து ராஜாத்தி பாராளுந் தேவியவள்
அந்தப் புரம்விட்டு அகலாத பத்தினியாள்
மாளிகையை விட்டு வாராத ராஜாத்தி
அஞ்சு திரைநடுவே அமர்ந்திருக்கும் பெண்ணரசி
எட்டுத் திரை நடுவே இருக்குமந்த மாதரசி

பத்துத் திரைநடுவே படுத்திருக்கும் மங்கையவள்
கூடப் புறப்படுவேன் கொற்றவரே என்றுரைத்தாள்
புத்திமதி சொன்னார் போரரசர் பாண்டியரும்
சோழனது நாடு துயரமடையு தங்கே
பயமான காரியங்கள் பற்றி நடக்குதங்கே
பட்டத்து ராஜாத்தி பாராளும் மங்கைநல்லாய்
வருவது கூடாது மங்கையே விட்டுவிடு
போவதுக்கு உத்தரவைப் பொட்டெனவே தந்துவிடு
நடப்பதற்கு உத்தரவை நங்கைநீ தந்துவிடு
வழியனுப்பி விட்டு மங்கை இருந்துவிடு
என்றந்தப் பாண்டியனார் எடுத்து மொழிந்தாரே
மன்ன ருரையை மறுக்க முடிந்திடுமோ
அரச ருரைமறுக்க ஆருமுண்டோ மேதினியில்
பாண்டிநா டாளும் பர்த்தாவே நீர்கேளும்
மாசனங்கள் மெச்சும் மகாராஜா நீர்கேளும்
வளவன் திருநாட்டில் மங்கையர்கள் துன்பப்பட..
குழந்தையெல்லாம் சாகக் குலமங்கை வாடி நிற்க
மீனுள் கிடந்து மேனியெல்லாம் சோர்ந்தழுக
வெள்ளத் துணியுடுத்தி மீனுள் கவலையுற
தங்களையும் நான்பிரிந்து தரிக்க முடிந்திடுமோ
பதியைப் பிரிந்து பரிதபிக்க ஆகாது
உங்களை விட்டு ஒருபொழுதும் நான் தரியேன்
வருகிறேன் பின்னாலே மறுக்கத் தருமமில்லை

ராஜாத்தி வருத்தப்படுதல்

என்று சொல்லி மாதரசி இருகண்ணும் நீர்சொரிய
அழுது புரளுகிறாள் ஆர்சொல்லுங் கேட்கவில்லை
நகையைக் கழட்டுகிறாள் நாக்கைத் துருத்துகிறாள்
கண்ணை யுருட்டிக் கடுக விழிக்கிறாள்

வெள்ளைப் புடவைதனை விரித்தே யுடுத்துகிருள்
கூந்தல் கலைத்துக் கோல மழித்துவிட்டாள்
பொட்டோடு மையெல்லாம் போக அழித்துவிட்டாள்
கண்டாங்கி பட்டெல்லாம் காற்றுப்பப் பறந்ததங்கே
பாண்டிய மன்னன் பதைபதைத்துப் போனானே
சோழமன்னன் அங்கே சோர்ந்து விழுந்தானே
மந்திரிமா ரெல்லாரும் மயங்கி நின்ரு ரவ்வேளை
வீதிக்கு வந்துவிட்டாள் மேன்மையுள்ள ராசாத்தி
மீனுள் வருந்துகிருள் வேறென்ன வேலையென்ருள்
நாதனுக்கு முன்னலே நடந்தாளே நங்கையரும்

ஊரிலுள்ள ஜனங்களெல்லாம் புறப்படல்

ஊரிரெல்லாங் கூச்சல் ஒன்ருய்க் கிளம்பியது
மக்களையும் பார்க்கவில்லை மாடுகன்றைப் பார்க்கவில்லை
வீட்டைக் கருதவில்லை வேலை கருதவில்லை
ஊரிலுள்ள பெண்களெல்லாம் ஒன்ருய்ப் புறப்பட்டார்
ராஜாத்தி பின்னலே நடக்கப் புறப்பட்டார்
மன்னவர்க்குப் பின்னலே மாசனங்க ளெல்லோரும்
எழுந்து நடந்தார்கள் எழிலுள்ள மாசனங்கள்
பாண்டியனுர் தன்னுடனே பட்டத் தரசியரும்
சோழமன்னர் மந்திரிகள் தோதான சேனபதி
பட்டாளச் சேவகர்கள் பகுதிகட்டும் ராஜாக்கள்
ஊரிலுள்ள மாசனங்கள் ஒருவரும் பாக்கியில்லை
பயணம் புறப்பட்டார் பாதைவெளி கொள்ளாமல்
செந்தா ளெழும்புதுகாண் திசைகள் தெரியாமல்
கருந்தா ளெழும்புதுகாண் கண்ணும்விண்ணும் கொள்
காடு செடிதாண்டிக் கடுகி வழிநடந்தார் [ளாமல்
வனமாய் வனந்தாண்டி வாரூர்கள் மாசனங்கள்
கரடி புலிவாழும் கடின வனந்தாண்டி

காண்டா வனந்தாண்டிக் கதலி வனங்கடந்து
வந்து புகுத்தார்கள் வளமழிந்த சோழநிலம்
சென்று புகுந்தார்கள் சீரழிந்த சோழநிலம்
காவிரிப்பூம் பட்டினத்தைக் கடிதி லடைந்துவிட்டார்
பட்டின மென்றபெயர் பகர அடுத்திடுமோ
பொட்டலாக் கிடக்கிறதாம் புகழ்பெரிய பட்டினந்தான்
பட்டினமும் பொட்டலாய்ப் பாழாக் கிடக்குதங்கே
தங்க இடமில்லை தரிக்க நிழலில்லை
மரமுங் கிடையாது மாளிகையும் இல்லையையா
வீடு கிடையாது விடுதி கிடையாது
தண்ணீர் கிடையாது தவிக்கிறார் ஜனங்களெல்லாம்

காவேரி ஆற்றில் ஊற்று வெட்டியது

ஆற்றிலே ஊற்று அணியணியாய்த் தோண்டலுற்றார்
பாண்டிய ராஜன் பாராளு மன்னனவர்
காவிரி ஆற்றில் கடுக இறங்கினரே
பெண்ணுக்கு வந்த பெரியதொரு துன்பத்தை
நீக்காமல் உண்பதில்லை நீண்ட சபதங்காண்
கஷ்ட மறிந்து கடுகிவழி பண்ணுகிறேன்
மாசனங்க ளெல்லாரும் வருந்திக் கிடக்குகிறார்
தண்ணீர் கிடையாமல் தவிக்கிற ரிந்நேரம்
பாண்டி நில மக்கள் பண்ணுகுறை ஏதுமுண்டோ
விருந்தாடி வந்தவர்கள் விழுந்திறக்க ஞாயமுண்டோ
தண்ணீர் வரவேண்டும் சாமி துணையிருப்பீர்
சொக்கர் பெருமானே துணையிருப்பீ ரென்றுசொல்லி
மண்வெட்டி வாங்கி வண்மையுள்ள பாண்டியனார்
காவேரி யாற்றில் கருத்தாக வெட்டினரே
வெட்டவெட்ட ஒன்றுமில்லை வேர்த்துவிட்டார் பாண்டி
கையுஞ் சலித்தாரே கட்டழகன் பாண்டியனும் [யனும்

மண்வெட்டி யைப்போட்டு மனஞ்சோர்ந்து விட்டார்கா
ஐயன் கூலத்ததனை அம்மை அறிந்தாளே [ண்
பாண்டியனுர் சோர்ந்ததனைப் பாரரசி கண்டுவிட்டாள்
பாண்டியனுர் தேவியவள் பத்தினியாள் ராஜாத்தி
ஐந்து திரையினுள்ளே அரசிருக்கும் ராஜாத்தி
எட்டுத் திரையினுள்ளே இருக்குமந்த ராஜாத்தி
பத்துத் திரைநடுவே படுத்திருந்த ராஜாத்தி
பெண்ணுக்குத் தீமையென்ற பேச்சதனைக் கேட்டவுடன்
கணவனுட னுகக் கட்டழகி வந்தாள்காண்
மாதர்க்குத் துன்பமென்ருர் மங்கை பொறுக்கவில்லை
தண்ணீரில்லாத் துன்பத்தைத் தாங்க முடிந்திடுமோ
எடுத்தாளே மண்வெட்டி ஏந்திளுள் கைதனிலே
காவேரி ஆற்றினிலே கடும்ஊற்று வெட்டினுளே
அமிர்தம்போல் தண்ணீரை அங்கேதான் காணலுற்ருர்
சிறிது சிறிதாகத் தேனூற்று வந்ததுவே
வந்தவர்கள் எல்லோரும் வாரிக் குடிக்கலுற்ருர்
பொழுதும் இருட்டியது போரரசர் ஏதுசெய்தார்
கூடாரம் போட்டார்கள் கொண்டுவந்த சாமானுல்
பாண்டியனுர் கூடாரம் பாங்கா யமைந்ததுவே
கூடாரத் துள்ளாகக் குந்தினுர் பெண்களெல்லாம்
பெண்ணுக்கு நேர்ந்த பிசகுதனைக் காண்பதற்கு
ஆண்மக்கள் போங்களென்று ஆணையிட்டார் ராஜாக்கள்

பெண்ணுக்கு வந்த துன்பத்தை அறியப் புறப்பட்டது

எழுந்து நடக்கலுற்ருர் இருந்தநல்ல வீரரெல்லாம்
ஊர்சுற்றி உளவறிய ஓடினுர் மந்திரிகள்
நாடுசுற்றி உளவறிய நாடினுர் தூதுவர்கள்
ஒற்றரோ ராயிரமாம் உளவர்பதி ஞயிரமாம்
சேவகர்கள் ஆயிரமாம் தீரர்பதி ஞயிரமாம்

எல்லோரு மாக எழுந்து நடக்கலுற்றார்
ஊரூராச் சுற்றி ஓடி யலையுகிறார்
சிற்றூரும் பேரூரும் சென்றுதுப்பு தேடுகிறார்
குடிசை முதலாகக் கொள்ளையற்ற மூலைகளும்
பாண்டியனார் சேனைசென்று பார்க்குதே உண்மைதனை
சோழனார் சேனைசென்று துருவிப் பிடிக்குதங்கே
இப்படித் தேடுகையில் எழிலான ராஜாக்கள்
பாண்டியரும் சோழரும் பதுங்கி நடக்கலுற்றார்
பட்டினத்துப் பக்கத்திலே பாழடைந்த குடிசைகளில்
ஜனங்கள் குடியிருக்கும் தன்மை யறிந்தார்கள்
எண்ணைச் சிறுவிளக்கு எரிகிறதைக் கண்டார்கள்
மின்னி மினிச்சென்று விளக்கெரிதல் கண்டார்கள்
தூரத்தி லேவிளக்குத் தோன்றுவதைக் கண்டார்கள்
முன்னே நடந்தாரே முடிவேந்தர் பாண்டியரும்
தொடர்ந்து நடந்தாரே சோழமன்ன ரப்போது
இருவரு மாக எட்டி நடந்தார்கள்
காதவழி நடந்து கண்டார் குடிசைதனை

வருந்திக்கிடக்கும் அமிர்தவல்லியை ராஜாக்கள்
கண்டுபிடித்தது

குடிசைகண்ட போதினிலே குரலோசை தான்கேட்டார்
அழுகைக் குரலோசை அங்கே வருகுதுகாண்
நெருங்கி நடந்தார்கள் நீதியுள்ள ராஜாக்கள்
அணுகி நடந்தார்கள் ஆணழகர் ராஜாக்கள்
அழுகைவருங் காரணமேன் ஆண்மகனு பெண்மகளா
என்று திகைத்தார்கள் இரண்டுமக ராசர்களும்
கிட்ட நெருங்கியதுங் கேட்டதையா பெண்குரல்தான்
ஒப்பாரி வைத்து உருகி யழுமோசை
காதிலே கேட்டார்கள் கண்ணீர் பெருகியதே

மங்கை யழுமோசை மன்னர்கட்குத் தாங்கவில்லை
வீட்டோரம் சென்றார்கள் மேதினியின் ராசாக்கள்
ஒண்டி நின்று கேட்டாரே உத்தமராம் ராசாக்கள்
சாய்ந்து நின்று கேட்டாரே தாரணியின் மன்னவர்கள்
இருபது நாழிகையும் இருந்தழுதாள் பெண்ணினல்லாள்
மூன்றுசாம நேரம்வரை விம்மி யழுதாளே
அழுது மயங்கி ஐயோ எனவீழ்ந்தாள்
மயங்கி விழுந்தாளாம் மாதுநல்லாள் அவ்விடத்தில்
பாண்டிமன்ன ரப்பொழுது பார்த்தா ரடையாளம்
வீட்டு முகப்பினிலே வேண்டுமடை யாளமிட்டார்
திண்ணை யருகினிலே தீட்டினார் மீன்கொடியை
மச்சக் கொடியதனை மாண்பாகத் தீட்டினாரே
புலிக்கொடியும் அவ்விடத்தில் போட்டாரே பாண்டியனார்
சீறும் புலியொன்று தீட்டினார் சித்திரமாய்
புறப்படலாம் மன்னவரே புந்தி மகிழ்வாக
செல்லலாம் மன்னவரே தீமை தெரிந்துவிட்டோம்
என்று வழிநடந்தார் இயல்பான பாண்டியரும்
தொடர்ந்து நடந்தாரே சோழமன்ன ரவ்வேளை
கூடாரம் சேர்ந்தார்கள் குணமுள்ள ராஜாக்கள்
அந்தப் புரத்தினிலே ஆணழகர் மன்னவர்கள்
வந்து நுழைந்தார்கள் மலர்ந்த முகத்துடனே
எழுந்து வரவேற்றாள் இணையில்லா ராஜாத்தி
கண்ட அதிசயத்தைக் கழறினார் மன்னவர்கள்
பார்த்த அதிசயத்தைப் பகர்ந்தாரே மன்னவர்கள்

அமிர்தவல்லியை அழைத்துவரும்படி பல்லக்கு அனுப்பினது

கேட்டவுடன் ராஜாத்தி கேடில்லா மாதரசி
பாண்டிய நாடாளும் பாங்கான பெண்ணரசி

5050a

பல்லக்குக் கொண்டு பறந்து வருகவென்றுள்
முத்துச் சிவிகைதனை முன்னே வரவிடென்றுள்
தங்கப் பல்லக்கு சதுரா வரட்டுமென்றுள்
மூன்றுவித பல்லக்கு முன்னே நிறுத்துமென்றுள்
பல்லக்குக் கென்னகுறை பாராளும் ராஜர்கட்கு
கொண்டு வந்து வைத்துக் கூடி நின்றார் தோழியர்கள்
மாதர்களே நீர்கேளும் வார்த்தை மறவாமல்
தோழியரே நீர்கேளும் சொல்லை மறக்காமல்
காவிரிப்பூம் பட்டினத்தின் கடைசிப் பகுதிகாண்
அழிந்ததொரு பட்டினத்தில் ஆகக் கடைசியது
வடக்கு முகமாக வழிநடப்பீர் ஞாபகமாய்
நேர்வடக்கே சென்றுல் நீண்டநாள் வீடுகள்காண்
பழய சிறுவீடு பலவுண்டு அவ்விடத்தில்
கூரைமேற் கட்டுகளும் குணமான மண்சுவரும்
தெருத்திண்ணை முகப்புடனே திசையுங் கிழக்காக
புலிக்கொடியும் மீன்கொடியும் போட்டிருக்கும் வாசலி
திண்ணைச் சுவரினிலே தீட்டி யிருக்குதுகாண் [லே
அடையாளங் கண்டு அங்கே விசாரியுங்கள்;
வருந்துகிற பெண்மகளை வருத்தப்படுத்தாமல்
வணங்கித் துதித்து மகாஜி யென்றுரைத்து
ராஜாத்தி உந்தனைத்தான் நண்ணி அழைக்கலுற்றுள்
சோழன் பெருந்தேவி சொகுசுள்ள ராஜாத்தி
பாண்டியன் மாதேவி பாங்கான ராஜாத்தி
இருவருமாக இருக்கிறார் மாளிகையில்
உந்தனைத் தானழைத்து உடனே வருகவென்றார்
பல்லக்கு வந்து படியருகில் நிற்குதுகாண்
முத்துச் சிவிகைவந்து முற்றத்தில் நிற்குதுகாண்
தங்கப்பல் லக்குவந்து சதுராக நிற்குதங்கே

எழுந்து புறப்படுங்கள் இருபேரு மிப்போது
என்று சொல்லி மாதரசை இங்கே அழைக்கவேண்டும்
வேறு மொருவார்த்தை விளம்பவே கூடாது
பெண்ணரசைக் கூட்டிவந்து பேணி நீர் சேரவேண்டும்
என்றுரைத்தார் பாண்டியனுர் எழிலான தோழியர்க்கு
தோழிமார் பன்னிருவர் துடித்து நடந்தார்கள்
பன்னிரண்டு தோழியர்கள் பதறி நடந்தார்கள்
பல்லக்குப் பின்னேவர பாங்கான தோழியர்கள்
விரைந்து நடந்தாரே மேனி வியர்வெடுக்க
கடுகி நடந்தாரே கண்ணிமைக்கு நேரத்திலே
வடக்கு முகமாக வாராரே தோழியர்கள்
தோழியரைக் கண்டு சூழ்ந்தார் சிலஜனங்கள்
பல்லக்கைக் கண்டு பயந்தாரே பார்த்தவர்கள்
என்ன வயணமென்று எவர்க்குந் தெரியவில்லை
கேட்கப் பயந்தாரே கேடில்லா மக்களெல்லாம்
அடையாளங் கண்டார்கள் அழகான தோழியர்கள்
மீனக் கொடியும் வெற்றிப் புலிக்கொடியும்
வன்னப் புலிக்கொடியும் மச்சப் பெருங்கொடியும்
கீட்டி அழகுசெய்யும் திண்ணைதனைக் கண்டார்கள்
அடையாளங் கண்டு அங்கே நுழையலுற்றூர்
பல்லக்கை வீதியிலே பாங்காய் நிறுத்தினுர்கள்
பன்னிரண்டு தோழியரும் பணிவாப் புகுந்தார்கள்
வீட்டுக்குள் சென்று விசாரித்தா ரப்போது
தாயார் தலைதூக்கித் தாதியரே வாருமென்று
மரியாதை செய்து வந்ததென்ன சொல்லுமென்றூர்
வணங்கித் துதித்தார்கள் வந்து நின்ற தாதியர்கள்

அமிர்தவல்லி கிடக்கும் அலங்கோலம்
வெள்ளைத் துணிபோர்த்தி மேனி யொடுங்கிப்போய்

ஆபரண மொன்றுமின்றி அழகு குறைவடைந்து
கண்ணீர் வடித்துக் கண்ணிரண்டும் வீங்கிப்போய்
அழகு நெடுங்கூந்தல் அங்கே தரையினிலே
சிக்குப் பிடித்து சீரழிந்து தான்கிடக்க
மங்கைப் பிராயம் வயதுபதி னேந்திருக்கும்
தங்கை படுத்துத் தரையிற் கிடந்தாள்காண்
தரையிற் கிடக்கும் தங்கை யவளருகில்
தாதியர்கள் சென்று தான்வணங்கித் தெண்டனிட்டார்

தாதிகள் அமிர்தவல்லியை அழைத்தல்

தாயே எழுந்திருப்பாய் தாதியர்க்குச் சேதிசொல்வாய்
மாதே எழுந்திருப்பாய் வார்த்தை உரைத்திடுவாய்
மகராஜி உந்தன் வருத்தந் தணிந்திடுவாய்
ராஜாத்தி உந்தனைத்தான் நண்ணி அழைக்கலுற்றுள்
சோழன் பெருந்தேவி துப்பான ராஜாத்தி
பாண்டியன் மாதேவி பாங்கான ராஜாத்தி
இருவருமாக இருக்கிறார் மாளிகையில்
உந்தனைத் தானழைத்து உடனே வருகவென்றார்
பல்லக்கு வந்து படியருகில் நிற்குதுகாண்
முத்துச் சிவிகைவந்து முற்றத்தில் நிற்குதுகாண்
தங்கப்பல் லக்குவந்து சதுராக நிற்குதுகாண்
எழுந்து புறப்படுங்கள் இருவரு மிப்போது
என்று சொல்லித் தாதியர்கள் இருகாலில் கும்பிட்டார்
எனக்கென்ன வேலை இருக்குது தாதியரே
அரண்மனைக்கு நான்வரவும் ஆகுமோ இப்பொழுது
வீட்டின் வெளியே விலகுவதுங் கூடாது
என்று சொல்லிஎன்னை இங்கே அடைத்துவிட்டார்
பகலெல்லாம் பாவி படுத்துக் கிடக்கிறேன்காண்
இரவெல்லாம் அழுது ஏங்கித் தவிக்கிறேனே

அரண்மனை வாசலுக்கு அணுகவொரு ஞாயமுண்டோ
ராஜ னிருக்கும் நடுப்பெரிய மண்டபத்தில்
மாதுநான் இப்போது வருவதற்கு ஞாயமுண்டோ
சொல்லுமென்று கூறிச் சொரிந்தாள்கண் ணீர்வெள்ளம்
தாயார் அழுதாள் தாதியர்கள் தாமழுதார்
சற்றுநே ரங்கழித்துத் தாதியர்கள் கூறலுற்றார்
எதற்கும் பெரிது ராஜரது சட்டமம்மா
மன்னரது உத்தரவை மறுப்பது கூடாது
ராஜாத்தி உத்தரவை நாம்மதிக்க வேண்டாமா
எழுந்திருங்கள் போகலாம் எழிலான அந்தப்புரம்
அந்தப் புரத்தனிலே ஆண்மக்கள் யாருமில்லை
முத்துப்பல் லக்கு மூடி யிருக்கிறது
உள்ளே யிருந்தால் ஒருவ ரறியார்கள்
ஆரு மறியாமல் ஆரண்மனையுள் சென்றிடலாம்
வாருங்கள் அம்மையரே மகராஜி தம்மிட..த்தில்
சென்று குறையுரைப்போம் சேதியெல்லாம் சொல்லிடு
[வோம்
என்றுமே தாதியர்கள் எழிலான பெண்ணணங்கை
தாங்கி நிமிர்த்தார்கள் தாயாரும் தானெழுந்தாள்
கொண்டுவந்து பல்லக்கில் கூடி அமர்த்தினர்கள்
தாயுமொரு பல்லக்கில் தனியா யிருந்தாளே
பன்னிரண்டு தாதியரும் பக்கத்தில் காவல்வந்தார்

அமிர்தவல்லியும் தாயாரும் ராஜாத்திகளைச்
சந்தித்தல்

அந்தப் புரத்தினிலே பல்லக்கை வைத்தார்கள்
ஆண்மக்க ளெல்லாரும் அப்பாலே போகுமென்றாள்
ராஜாத்தி இருபேரும் வந்து நின்றார் அப்பொழுது
கதவைத் திறந்தார்கள் கண்டார்கள் பெண்ணழுதை

கண்ணீர்க் கடலில் கலங்குமொரு கப்பலைப்போல்
சூரு வளிக்காற்றில் சுழலுமொரு தோணியைப்போல்
தோகை பறிகொடுத்துத் துடிக்கும் மயில்போல்
காட்டில் தனியிடத்தில் கள்ளர் வழிமறித்து
தட்டிப் பிடுங்கத் தனியே பறிகொடுத்து
உற்றுத் தவிக்கும் ஒற்றை மகளிரைப்போல்
வந்த விதிக்கு வழியறியாக் கன்னியவள்
மாயவிதிக்கு மாற்றறியாக் கன்னியவள்
அழுகை யறிவாள் அதற்குமேல் ஒன்றறியாள்
அழுகை யறியாத அழகான ராஜாத்தி
ஏறிப்புறப்படும் எழிலான பல்லக்கில்
அழுது கிடக்கிறாள் அழகான கன்னியவள்
பாண்டியன் மாதேவி பார்த்துத் துடிதுடித்தாள்
தங்கமே கண்ணே தனிப்பெரிய ரத்தினமே
மானே மயிலே வளமுயர்ந்த ரத்தினமே
என்று தழுவி எடுத்தாளே பெண்ணமுதை
தூக்கி யெடுத்துத் தோளாடு சேர்த்தினளே
கண்ணைத் துடைத்தாள் கலையை யொழித்தாளே
பெண்ணே அமுதமே பேரெழுசந்த ரத்தினமே
மனவருத்தங் கொள்ளாதே வடிக்காதே கண்ணீரை
கண்ணீரை மாற்றக் கவலைமிகக் கொண்டுவிட்டோம்
எல்லாப் பொறுப்பும் எங்கள் வசமாச்சு
தாயே வருந்தாதே சார்ந்ததென்ன சொல்லிடுவாய்
மாதே வருந்தாதே வந்ததென்ன சொல்லிடுவாய்
நங்காய் வருந்தாதே நடந்ததென்ன சொல்லிடுவாய்
பட்டெங்கே நகையெங்கே பாத சரமெங்கே
பூச்சூடும் கூந்தல் புழுதி படிந்ததென்ன
வந்த விதத்தை வகையுடனே சொல்லுமென்றாள்

அமிர்தவல்லி சரித்திரத்தைச் சொல்லும்படி கேட்டது

பாண்டிமன்னர் தேவி பாஞ்சாலி வீற்றிருந்தாள்
சோழமன்னர் தேவி சொகுசுள்ள ராஜாத்தி
பக்கத்தி லங்கே பக்தியுடன் வீற்றிருந்தாள்
சோழனும் பாண்டியனும் தொலைவி லிருந்தார்கள்
ஜன்னலுக்கு வெளியே தாரரசர் தானிருந்தார்
இருந்து நடக்கிறதை இருவரும் தான்பார்த்தார்
சத்தங்கள் போடாமல் தானிருந்தார் மன்னவர்கள்
பேசாமல் அங்கே பெண்வார்த்தை கேட்டிருந்தார்
அந்தவொரு வேளையிலே அமிர்தவல்லி முகநோக்கி
மாதேள்ன் செல்வமே மாணபுடைய பெண்ணரசே
துன்பம்வந்த மாதிரியைச் சொல்லுவாய் இப்பொழுது
என்னதுன்ப மானலும் இப்போ தவிர்த்திடுவோம்
வெள்ளை உடுத்தியதேன் வேஷங் குலைந்ததென்ன
போட்டிருந்த ஆபரணம் பொல்லாங்காய்ப் போனதென்ன
கூந்தல் குலைந்ததென்ன கோரரூப மானதென்ன
கண்ணிலே நீரோடக் கதறி யழுவதென்ன
விளங்க வுரைத்திடுவாய் மேன்மையுள்ள பெண்ணரசே
தெரிய வுரைத்திடுவாய் சீரான பெண்மகளே
என்று மிகவருந்தி எடுத்துரைத்தாள் ராஜாத்தி

அமிர்தவல்லி தன் கஷ்டத்தைச் சொல்லுதல்

அமிர்தவல்லி வாய்திறந்து அப்போ துரைக்கலுற்றாள்
ராஜாத்தி நீங்கள் நானொருத்தி ஏழைப்பெண்
அரண்மனைக்கு என்னை அழைத்து அன்புசெய்து வாழ்த்து
வாழ வழியில்லா மாதுநான் கேட்டிடுவீர் [கிறீர்
உயிரோடு செத்த உதவாப் பிணமானேன்

மாதருக்குள் நானொருத்தி மணமில்லாப் பூவானேன்
கன்னியருள் நானொருத்தி கழிபட்டுப் போனேனே
என்னுடைய கதைகேட்டால் எல்லாருக்குந் துன்பம்வரு
அதிட்டமில்லாப் பாவி ஆகாத பாவியம்மா [ம்
எதுக்குவழி யாருலும் எனக்குவழி இல்லையம்மா
சுற்றத்தார் எல்லாரும் தாவென்று தள்ளிவிட்டார்
தாயாதி எல்லாரும் தள்ளிவிட்டார் குப்பையிலே
வேண்டாத குப்பை வெறுங்குப்பை யானேனே
ஆகாத குப்பை அலக்கழிந்த குப்பையானேன்
என்கதையைக் கேட்டு என்னபலன் பெறுவீர்
என்றுரைத்து நின்றுள் இருகண்ணும் நீர்சொரிய
வாக்கு திணறியது மறுமூச்சு வாங்கியது
பேச்சுத் திணறியது பெருமூச்சு வாங்கியது
சொல்ல முடியாமல் சோர்ந்து விழுந்தாளே
தண்ணீர் தெளித்தார்கள் தாங்கிப் பிடித்தார்கள்
பேச முடியவில்லை பெண்ணரசி சோர்ந்துவிட்டாள்

அமிர்தவல்லி மயங்கி விழுந்தவுடன் அவள்
தாயாரைச் சொல்லும்படி கேட்டது

தாயாரைப் பார்த்து தாரரசி கூறலுற்றாள்
அம்மா பெரியவளே ஆதரவு செய்பவளே
உன்மகளால் பேச ஒன்றும் முடியவில்லை
துன்பம் பொறுக்காமல் சோர்ந்து விழுந்துவிட்டாள்
உங்கள் கதையெல்லாம் ஒருமிக்கச் சொல்லிடுவாய்
நடந்த கதையெல்லாம் நாயகியே சொல்லிவிடு
கேட்டு வகைசெய்வோம் கேடு தவிர்த்திடுவோம்
துன்பத்தைப் போக்கி சுகத்தையே தந்திடுவோம்
கூசாமல் நாணமல் கோதையே சொல்லிடுவாய்
நாணமல் கூசாமல் நங்கையே சொல்லிடுவாய்

பயப்படத் தேவையில்லை பாங்கா யுரைத்திடலாம்
நடுக்க மெதற்கம்மா நன்று யுரைத்திடலாம்
என்றுரைத்தாள் பாண்டி எழிலான ராஜாத்தி
ராஜாத்தி சொற்கேட்டு நாயகியு மேதுரைப்பாள்
தங்கள் கதையெல்லாம் தாயாருரைக்க லுற்றாள்

தாயார் தங்கள் வரலாறு சொன்னது

செல்வ நிறை பட்டினமாம் சீரான பட்டினமாம்
கங்கைக்கு மேலான காவிரியின் நீரோடி
கடலில் கலக்குமொரு காவிரிப்பூம் பட்டினத்தில்
வணிகர் தெருவின் வளமுரைக்கக் கூடியதோ
வயிர மொருகுவியல் மாணிக்கம் மறுகுவியல்
குவியல் ஒளிவீசும் கூட்டுமிடம் டாலடிக்கும்
வாசலில் முத்தும் வயிரமணி சோதிவிடும்
கூட்டிப் பெருக்கிக் கொட்டுமிடம் டாலடிக்கும்
சிந்துகிற முத்து தெருவெல்லாம் சோதிவிடும்
தேடுவா ரின்றித் திசையெல்லாம் டாலடிக்கும்
கோபத்திற் பெண்கள் குலத்தெரிந்த ஆபரணம்
தெருவிற் கிடந்து சிதறி ஒளியடிக்கும்
வீதியிலே பெண்கள் விளையாடும் போதினிலே
தங்கக் கலயம்வைத்து தனிமுத் தரிசியிட்டு
வெள்ளி விறகுவைத்து மென்பவளத் தீமூட்டி
வயிரக் கரண்டியினல் வாரிப் பதம்பார்க்கும்
மரகத ரத்தினமும் மாணிக்க ரத்தினமும்
வயிரவயி ரியமும் மற்று முள்ள ரத்தினமும்
போட்டுக் கறிசமைத்து பொன்பாத் திரங்களிலே
மேன்மையா வைத்து விளையாடும் காட்சிதனை
காண முடியுமோ கண்ணிரண்டுங் கொள்ளாது
இப்படிப் பட்ட எழிலான வணிகர்களாம்

காவேரி யாறு கனமாப் பெருகையிலே
ஊரை அழிக்க ஒருநொடியில் வந்ததப்போ
பட்டினத்தை அழிக்கப் பலமாய் வருகுதையோ
என்ன செய்வதென்று ஏங்கினர் சோழமன்னன்
அஞ்சா திருமென்று அப்போ தெழுந்தார்கள்
வணிகர் குலத்துதித்த வாலிபர்கள் அத்தனையும்
வீட்டி லடைந்திருந்த மேலான பஞ்சுமூட்டை
ஆயிரம் மூட்டைதனை அப்படியே கொண்டுபோனர்
பதினா யிரம்மூட்டை பதட்டமாக் கொண்டுபோனர்
இருபதா யிரமமூட்டை எடுத்துவிட்டா ரந்நேரம்
ஐம்பதா யிரம்மூட்டை அப்பொழுதே போனதங்கே
போடடா காவேரி பொங்குவதைப் பார்த்திடுவோம்
ஊரை அழிப்பதையும் ஒருநொடியில் பார்த்திடுவோம்
ஒருலட்சம் மூட்டைதனை ஒழுங்கா அடுக்குமென்றார்
காவேரி யாறு கனமாய்ப் பெருகுதங்கே
என்ன பெருகி யெழுந்தாலும் ஆகுமோதான்
மூன்று பனையுயரம் முடுக்கினர் பஞ்சுப்பொதி
ஆகாசம் மூட்ட அடைந்துவிட்டார் பஞ்சுப்பொதி
பெருகிய தண்ணீரெல்லாம் போனதே பேசாமல்
அப்படிப் பட்ட அதிசெல்வ ராயிருந்தார்
வணிகருட செல்வ வளமுரைக்க லாகாது
வெள்ளிக் கதவை விலக்குமென்று சோழமன்னன்
உத்தரவு போட்டார் ஒன்றுகூடி வணிகரெலாம்
தங்கக் கதவு தனிக்கதவு போட்டார்கள்
அப்படிப் பட்ட அடங்காத செல்வமுள்ள
வாழ்வணிகர் தங்குலத்தில் மாதுநான் பெண்பிறந்தேன்
பெண்பிறந்து வாழ்ந்தேன் பிசகை அறியேனே
துன்ப மறியேன் சுகமாக வாழ்ந்திருந்தேன்

தேடித் தவமிருந்தேன் தெய்வத்தைக் கும்பிட்டேன்
அரச மரம்சுற்றி அலைந்து திரிந்தேனே
பிள்ளைப் பயித்தியத்தால் பேணி அலைந்தேன்காண்
போகாத கோயிலில்லை போய்முழுகாத் தீர்த்தமில்லை
கடைசி காலத்தில் கண்டே னொருகுழந்தை
நாற்பதாம் வயதினிலே நங்கைகர்ப்ப மாகலுற்றேன்
பத்துமா தம்சுமந்து பட்டேன் பெரும்பாடு
தூக்கிச் சுமந்தேன் சுந்தரனைக் காணவில்லை

அமிர்தவல்லி பிறந்து வளர்ந்தது

பெண்குழந்தை யொன்றைப் பெற்றேன் தரைதனிலே
இனிக்குழந்தை நமக்கில்லை இதுதான் குழந்தையென்று
பெண்ணி யிருந்தாலும் பேணி வளர்த்தேன்காண்
மாதா யிருந்தாலும் வளர்த்து மகிழ்ந்தேனே
அமிர்தவல்லி யென்று அரியதொரு பேருமிட்டோம்
என்கணவன் கப்பலிலே ஏறிப்போய் விட்டார்காண்
கப்பல் கரைசேர்ந்த கணக்குந் தெரியவில்லை
பாய்மரமும் காற்றும் பற்றி யடித்ததென்றார்
கப்பல் கவிழ்ந்ததென்றார் காரணமுங் காணேனே
இருப்பதும் இறந்ததும் ஏதுந் தெரியவில்லை
நானே தனியாள் நாயகனு மில்லாமல்
பெண்ணே துணையாப் பேணி யிருந்தேனே
ஒருவருக் கொருவர்தான் உற்றதுணை யாயிருந்தோம்
பெண்ணும் வளர்ந்தாளே பேச்சும் படித்தாளே
நடக்கப் படித்தாளே நாவசைத்து வந்தாளே
பள்ளிக் கனுப்பினேன் பால்வாய் மணம்பெற்றாள்
எழுத்துப் படித்தாள் இலக்கணமும் தான்படித்தாள்
கணக்குப் படித்தாள் கற்றாள் இலக்கியங்கள்
தொல்காப் பியம்பார்த்தாள் தூய குறள்படித்தாள்

செல்வத் தமிழ்குதிக்கும் சிலப்பதிகா ரம்படித்தாள்
திருவா சகமும் தெள்ளுமணி மேகலையும்
மறுவா சகமின்றி மாது படிக்கலுற்றாள்
சங்கீதங் கற்றாள் தாள மறியலுற்றாள்
வீணை பயின்றாள் வேயின் குழல்பயின்றாள்
பன்னிரண்டாம் ஆண்டு பருவம் வளர்ந்ததம்மா
அழகை வருணிக்க ஆரா லு மாகாது
தங்க நிறமும் தாமரைப்பூ மேனியையும்
வில்லொத் தபுருவம் மேனி தகதகப்பும்
அழகு நிறைவும் அறிவுப் பெருக்கமும்
கண்டு திகைத்துக் கல்யாணப் பேச்செடுத்தார்
வந்ததொரு மாப்பிளைகள் வகுக்க முடியாது
பேசிவந்த மாப்பிளையின் பெருக்க மதிகமம்மா
சொந்தத்தில் வந்தவர்கள் சொல்லி முடியாது
அரச ரறிந்தால் அபாயம் வருமென்றார்
மன்ன ரறிந்தால் மதிமோச மாகுமென்றார்
கல்யாணம் செய்துவிட்டால் கவலையில்லை யென்றுரைத்
தாலிகட்டி விட்டால் தடையேது மில்லையென்றார் [தார்
பயந்து மனம்மருண்டேன் பாவிநா னப்போது
கணவன்வர வில்லையென்று கரைந்து அழுதேனே
மணவாள னில்லையென்று வருந்தி அழுதேனே
கப்பலேறிச் சென்றவர்தான் கரைசேர்வா ரென்றிருந்
வங்கக் கடலேறி வாராமற் போனாரே [தேன்
மாமாங்க காலம் வரவை யறியவில்லை
பன்னிரண்டு தன்வருஷம் பாதை தெரியவில்லை
சேதி தெரியவில்லை சீரான மனனருக்கு
வழியுந் தெரியவில்லை மாமாங்க மானதம்மா

அமிர்தவல்லிக்குக் கல்யாண ஏற்பாடு

பங்காளிக ளெல்லாம் பாங்காக வந்திருந்தார்

சுற்றத்தா ரெல்லாரும் சூழ்ந்திருந்தார் மங்களமாய்
பஞ்சாங்கக் காரர்வந்து பார்த்தார் பொருத்தமெலாம்
காரைக்கா லம்மை கருவுற்ற கோத்திரமாம்
பெருமை யடைந்த பெரியதொரு கோத்திரமாம்
அந்தநல்ல கோத்திரத்தில் அழகில் சிறந்தவராம்
பதினாறு வயதுப் பாலகனு ரென்றுரைத்தார்
அழகு நிறைந்தவராம் அறிவு மிகுந்தவராம்
படிப்பிற் சிறந்து பணமும் பெருத்தவராம்
அந்தவொரு மாப்பிளைதான் அத்தனைக்கும் நல்லதென்
பத்துப் பொருத்தம் பார்த்தார்கள் பிராமணர்கள் [ரூர்
தாலிப் பொருத்தம் தனியே பொருந்துதென்ரூர்
பிள்ளைப் பொருத்தம் பெருகி யிருக்குதென்ரூர்
எல்லாப் பொருத்தம் ஏற்றிருக்கு தென்ரூர்கள்
பஞ்சாங்கக் காரர்சொன்னால் பார்க்கவொரு பேச்சுமூண்
நல்லநாள் பார்த்தார்கள் நகலெழுதித் தந்தார்கள் [டோ
சரியென்று சொல்லி சாமான்கள் சேகரித்தோம்
கல்யாணம் சிறப்பாக் கனக்க முடித்துவிட்டோம்
மாப்பிளை யழகு வருணிக்க முடியாது
பெண்ணுக்குச் சோடி பெற்றுவிட்டோ மென்றிருந்தோம்
மாப்பிளை யைப்பார்த்து மகிழ்ந்து கிடந்தோமே
நல்லதொரு ஜோடியென்று நாங்கள் மகிழ்ந்திருந்தோம்

மாப்பிள்ளை கப்பலுக்குப் பயணமானது

மணமுடிந்த பின்னே மாதமொரு மூன்ரூச்சு
கல்யாண மாகிக் கடந்ததே மூன்றுமாதம்
மூன்றுமாத மானவுடன் முக்கிய வேலைவந்து
மாப்பிளையும் கப்பலிலே மணமாப் பயணம்வைத்தார்
கப்பல் பயணமென்ரூர் கலக்க மடைந்தேனே
பயணமென்ற சொல்கேட்டுப் பதறினேன் அங்கமெலாம்

என்ரூலும் கேட்கவில்லை ஏறினர் கப்பலிலே
சுற்றத்தா ரெல்லாரும் சூழ விருந்தார்கள்
மாது சமையுமுன்னே வந்திடுவார் மாப்பிளையும்
பெண்ணுள் சமையுமுன்னே போந்திடுவார் மாப்பிளையும்
என்று சொல்லித் தேற்றினர் இருந்தவர்க ளெல்லாரும்
மானுள் தனக்கு வயதுபனி ரண்டாச்சு
வருஷ மிரண்டுக்குள் வந்திடுவார் மாப்பிளைதான்
என்று நினைத்து எதிர்பார்த் திருந்தேனே

மாப்பிள்ளை சிவபத மடைந்தது

வருஷமொன்று நிறையவில்லை வந்ததே சேதியொன்று
கப்பலில் வந்தவர்கள் காட்டினர் ஓலைதன்னை
ஓலையைக் கண்டேன் உடலொடுங்கிச் சாணுனேன்
பொல்லாத ஓலைகண்டு போனுமே கேடுகெட்டு
மாயப் பனையோலை வாழ்வைக் கெடுத்ததுவே
கரும்பனையின் ஓலைவந்து கனத்தை யழித்ததுவே
ஓலை பிரித்தார் உறவினர்கள் கூடிவிட்டார்
மாப்பிளைக்கு வாந்தி வரவரப் பெரிதாச்சு
வயிற்றுலே போச்சு வணங்கி வரவில்லை
வைத்தியங்கள் பார்த்தோம் வாகடங்கள் தான்பார்த்தோம்
என்னதான் பார்த்தும் ஏதுங் குணமில்லை
சென்ற பொழுது சேர்ந்தார் சிவபதத்தில்
நேற்றுப் பகலே நீண்ட சிவபதத்தில்
போய்ச்சேர்ந்தார் என்று பொறித்திருந்தார் ஓலையிலே
கேட்டுத் துடித்தோம் கிடந்து புரண்டோமே
செய்யும் வகையின்றித் திண்டாடி நின்றேமே

கணவனிழந்த பெண்ணை என்ன செய்யலாமென்று
சாஸ்திரம் பார்த்தது

பங்கா ளிகள்கூட்டம் பாங்காகக் கூடியுள்ளார்

தாயாதி யெல்லாரும் சதுரா யிருந்தார்கள்
ஊர்க்கா ரியக்காரர் உயர்பெரிய மனிதர்களும்
வந்து குழுமி வகைவகையா வீற்றிருந்தார்
சாஸ்திரங்கள் கற்ற தனிப்பெரிய பிராமணர்கள்
திண்ணை வெளியிலே சேர்ந்திருந்தா ரப்போது
தாயத்தார் எல்லாரும் சாஸ்திரத்தின் படியாக
வாழவேண்டு மென்று வருதியிட்ட காலமது
சாஸ்திரத்தைப் பார்த்துத் தவருமல் வாழவென்று
பெரியமகா சாஸ்திரியைப் பேணியழைத்து வந்து
ஒவ்வொன் றுங் கேட்டு ஒழுங்குசெய்து வந்தார்கள்
வாழ்கிற வாழ்வெல்லாம் வருதியிட்டு வந்தார்கள்
மாப்பிளை இறந்தவுடன் வருதியென்ன சொல்லுமென்றார்
பீதாம் பரம்போட்டுப் பெரியதொரு பூணூலும்
உச்சிக் குடுமியும் உத்ராக்ஷ மாலைகளும்
சந்தனப் பூச்சும் தனித்தபஞ்ச கச்சமும்
தொந்தி வயிறும் சொறிபிடித்த மேனியுமாய்
இருந்ததொரு சாஸ்திரியை யெல்லாரு மாச்சேர்ந்து
சுவாமியே எங்கள் துயரந் தவிர்ப்பவரே
குடியை வளரவைக்கும் குண நிறைந்த குருமூர்த்தி
சாஸ்திரப் படியே தான்காக்கும் ஐயாவே
கனவு னிறந்தால் காணுமுறை யென்னவென்று
விளங்க வுரைத்து மேன்மைப் படுத்துங்கள்
என்றே விழுந்து எல்லவருங் கும்பிட்டார்

விதவைக்கு சாஸ்திரி தண்டனை விபரம் கூறியது

சாஸ்திரியார் சொன்னார் சதுரான சாஸ்திரத்தை
உலகிற் பெரிய உத்தமராம் வணிகர்களே
பெண்ணுக்குத் தெய்வம் பேணும் புருஷன்காண்

மாதருக்குத் தெய்வம் மணவாள னென்றறியும்
மணவாள னின்றி மற்றுமொரு தெய்வமில்லை
பூவசைத் தாரின்றிப் பின்னுமொரு தெய்வமிவ்வை
கணவ னிழந்தவர்கள் கைம்பெண் ணெனப்படுவர்
சன்யாசி போலத் தனிவாழ் விருக்கவேண்டும்
பட்டுடுத்தக் கூடாது பொட்டிடவுங் கூடாது
ஆபரண மொன்று மணியவே கூடாது
தாலிகட்டக் கூடாது தலைபின்னக் கூடாது
மலர்சூட லாகாது மஞ்சள்பூச் சாகாது
வாழ்வு நினைத்தால் மகாபாவ மாகுமப்பா
சாப்பா டொருவேளை தண்ணீர் இருவேளை
தூக்கம் சிறுபொழுது சொன்னர்கள் சாத்திரத்தில்
பால்தயிர் கூடாது பலகார மாகாது
நெய்யுண்ண லாகாது நெய்ப்பண்ட மாகாது
தாம்பூலம் வாயில் தரிக்கவே கூடாது
ஆண்வாடை கூடாது அடங்கி யிருக்கவேண்டும்
கல்யாண வீடுகளில் கடவில்வரக் கூடாது
மங்கள காரியத்தில் வழிநடக்கக் கூடாது
விதவை தலைகண்டால் வெகுகா ரியங்கள்கெடும்
சகுனங் கொடுமையாம் தலைபோகுங் கண்டீரோ
கப்பற் பிரயாணம் கடும்பயணம் போகிறவர்
விதவை தலைகண்டால் வீடு திரும்பார்கள்
பொல்லாச் சகுனமது பொட்டனவே தீமைவரும்
பெண்ணை அடக்கிப் போடுவது கஷ்டமன்றே
ஆதலால் இப்பொழுதே ஆனதெல்லாம் செய்யவேண்டும்
சாஸ்திரத்தில் சொன்னவழி தவறவே கூடாது
கணவ னிழந்த கற்புள்ள பெண்ணதனை
புருஷ னிழந்த பெண்ணதனை வாசல்வைத்துத்

தாலி யறுத்துத் தங்கநகை கழட்டி
மங்கலியம் வாங்கி வயிரநகை கழட்டி
பட்டுப் புடவையெல்லாம் பாங்கா உரிந்துவிட்டு
வெள்ளைத் துணிகொடுத்து மேனி குளிப்பாட்டி
தண்ணீர் துடையாமல் தனியே இருத்துமென்றார்
பகலில் ஒருவேளை பாக்கிநேரம் பட்டினியாய்
போடுமென்று சொன்னார் பொல்லாத சாஸ்திரியார்
வீட்டுக்கு வெளியே விடாதீர் என்றுரைத்தார்
சாஸ்திரிக்கு நாங்கள் சற்றும் பயமில்லை
பஞ்சாங்கக் காரருக்குப் பயப்படவே இல்லையம்மா
பங்காளி கூடிப் படுத்தினார் பாடுகளை
பங்கா ளியைமீறிப் பாரில் இருப்புண்டோ
தள்ளிவைத்துச் சீரழிப்பார் தாரணியோர் கேலிசெய்வார்
வாழ விடுவாரோ வையகத்தார் ஏசாரோ
தனிஇரண்டு பெண்ணிருந்தோம் தரிக்கவகை யுண்டோ
ஆரிடம்போய் அழுவதென்று அறியும் வகையில்லை

தாயாதிகள் கூடி அமிர்தவல்லியைத்
துன்பப்படுத்தியது

ஜாதியா ரெல்லாரும் தலைதடு மாறிவிட்டார்
செய்யும் கொடுமைதனைச் சிறிது முணரவில்லை
தீதான செய்கையென்று தெரிந்தா ரொருவரில்லை
பெண்ணைப் பிடித்துவைத்தார் பிடித்தார் சடங்குமுறை
பிணத்துக்குச் செய்யும் பிழையான சடங்குகளை
உயிருடனே இருக்கும் உத்தமிக்குச் செய்தார்கள்
வாழ்வரசிப் பெண்களெல்லாம் மாயமாப் போனார்கள்
தாலி யறுத்த தையலர்கள் நின்றார்கள்
தாலி கலைந்தார்கள் தங்க நகை பிரித்தார்
மங்கலியம் வாங்கினார் வயிர நகை பிரித்தார்

பட்டுக் களைந்தார்கள் பணிகளெல்லாம் கழற்றிவிட்டார்
தலையைக் குலைத்தார்கள் சாஸ்திரத்தின் பேர்சொல்லி
குளிப்பாட்டி னார்கள் இந்தக் கொம்பனையை அப்போது
தண்ணீர் துடைக்கவில்லை தனிப்பெரிய மாதரசை
இரங்கி யழுதார்கள் எல்லோரும் மப்போது
வருந்தி யழுதார்கள் வந்திருந்தோ ரத்தனையும்
கண்கள் சிவக்கக் கதறி யழுதார்கள்
பார்த்து சகிக்கவில்லை பதறினர் மக்களெலாம்
துரியோ தனன்சபையில் துகிலுரிந்த மாதிரிதான்
பெரியோர்கள் வந்திருந்தார் பேச முடியவில்லை
அறிவாளர் வந்திருந்தார் அறமுரைக்க மாட்டாமல்
உதவியற்ற ஏழையா ஒருபெண் அகப்பட்டாள்
ஐவர் பெருவீரர் அடங்கிக் கிடந்தாராம்
துரோபதை சேலைபற்றித் துகிலுரிந்த மாதிரியை
கதையிற் படித்தோம்இங்கு கண்ணாலே பார்த்தோமே
பாவ மறியாப் பசுங்குழந்தை யைப்பிடித்துக்
தொந்தரவு செய்தால் சூழும் நெறியுண்டோ
காட்டு வழியிலே கள்ளர் சபைநடுவே
தனியே அகப்படாமல் சாருந் துணையுண்டோ
சுற்றத்தார் எல்லாரும் சூழ்ந்து கொடுமைசெய்தால்
ஆதரிப்போ ரெல்லாரும் அநியாயம் செய்தாக்கால்
பங்கா ளிகள்கூடிப் பரிதாபஞ் செய்தாக்கால்
மீள வழியுண்டோ மேதினியில் வாழ்வுண்டோ
வேடர் வலையில் விழுந்ததொரு மானைப்போல்
சாஸ்திரியின் சூழ்ச்சிக்குத் தங்கை யகப்பட்டாள்
மீள வழியில்லை மேன்மைக் கிடமில்லை
மாதுநல்லாள் பட்டமனவருத்தம் மெத்தவம்மா
தங்கை யவள்பட்ட சல்லியங்கள் மெத்தவம்மா

பொறுக்க முடியாமல் பெண்ணரசி மனங்கொதித்தாள்
அமிர்தவல்லி மாதரசி ஆங்காரங் கொண்டுவிட்டாள்
தங்க மகளுக்குத் தாங்க முடியவில்லை

அமிர்தவல்லி ஜாதிக்கட்டுப்பாட்டை இகழ்தல்

இரவுமணி பன்னிரண்டு இருக்குமந்த நேரத்திலே
எழுந்து நிமிர்ந்து இருந்தாள் படுக்கைதனில்
ஆணுக்குப் பெண்ணென்ன அவ்வளவு கேவலமா
புருஷ னிறந்தால் போராட்டம் மித்தனையா
கணவ னிறந்தால் காட்டுங் கொடுமையென்ன
கேட்பா ரிலையா கேடு நடக்கிறதே
பெண்ணைக் கொடுமைசெய்யப் பெற்றோரும் பார்த்திருக்க
சுற்றத்தார் பார்த்துச் சூழ்ந்தே அருகிருக்க
ஏனென்று கேட்பார் யாருமில்லை அவ்விடத்தே
புருஷனிறந்தால் பெண்ணைக் கொடுமை செய்தார்
மனைவி யிறந்தால் வாழும் புருஷனுக்குத்
தண்டனைகள் இல்லையென்று சாதிக்க ஞாயமுண்டோ
நகையைப் பிடுங்கி நடுவாசலில் வைத்துத்
தண்ணீரை ஊற்றிச் சாயத் துணிகொடுத்து
துப்பட்டா வேட்டிதனைச் சுருட்டிப் பிடுங்கிவைத்து
கால்நீட்டிக் கைவைத்துக் கனத்தழப் பாரிசொல்லி
ஒருவேளைச் சோறு உண்ணும் படிசெய்து
வீட்டிலடைத்து வீதிவழி போகாமல்
செய்தால் ஒழுங்காகும் செய்வாரோ மூடமக்கள்
பெண்டாட்டி செத்தால் பிழையொன்று மில்லையென்றார்
சாவுநடக்கும் தனிப்பெரிய நாளினிலே
மறுதாரம்பேசி மகிழ்ந்து திரிகிறார்கள்
பழய மனைவிசெத்தால் புதுமனைவிக் காசைகொண்டு
மகிழ்ச்சிகொண்டு குதிக்கிறார் மாப்பிளை மார்களெல்லாம்

ஆணுக் கொருநீதி பெண்ணுக் கொருநீதி
அநியாயம் செய்கிறார் அவனி மனிதர்கள் தாம்
அந்தநாள் நடந்த அநியாயம் கொஞ்சமல்ல

அமிர்த்வல்லி துரோபதை சபதம் வைத்ததைச் சொல்லுவது

துரியோ தனன்சபையில் துரோபதை நாச்சியாரை
கொண்டு நிறுத்திவைத்தார் குடிகேட ரானவர்கள்
துணையின்றி நின்றாளே துரோபதை நாச்சியாரும்
ஆதரவு சொல்வார் ஆருமில்லை அவ்விடத்தே
வீஷ்மர் துரோணர் விதியுணர்ந்த பார்ப்பார்கள்
ஐந்து புடிமன்னர் ஆணழகர் பாண்டவர்கள்
ஐம்பத்தாறு தேசத்து அழகான மன்னவர்கள்
எல்லாரும் பார்த்திருந்தார் இந்த அநியாயம்
ஆரும் விலக்கவில்லை அநியாயச் சபையினிலே
கண்ணைப் பிசைந்தார்கள் கலக்கமுற்று நின்றார்கள்
விரலைப் பிசைந்தார்கள் விழியை விழித்தார்கள்
நரம்பில் பெலமில்லை நாடி விலக்குதற்கு
உடலில் பெலமில்லை உதறி விலக்குதற்கு
தனியாகப் பெண்துடித்தாள் சார்ந்த சபைதனிலே
விதுரன்சொல் வார்த்தை வீண்புலம்ப லானதங்கே
ஐவர் பிணம்போல அங்கே யிருந்தார்கள்
துணையில்லாப் பாஞ்சாலி துடிக்கிறாள் மண்டபத்தில்
ஆரடா தம்பி அழகான துச்சாதனா
ஏற்றடா என்மடியில் எழிலான துரோபதையை
சேலை யுரியடா சீரைக் குலையடா
உடம்பின் அழகு ஒருமிக்கத் தெரியவேண்டும்
நகையைப் பிடுங்கடா நம்முடைய தாதியவள்
கையி லகப்பட்டாள் கண்டமட்டும் பார்த்திடுவாய்

சவுரி குலத்துவிடு தாவணியை நீக்கிவிடு
சேலை யுரிந்து கிண்டாடி நிற்கவிடு
என்ன வுருமினுன் ஈடழிந்த மாபாவி
துரியோ தனனுரைத்த சொற்கேட்டுத் தம்பியவன்
தமயனுக்கு வாய்த்த தம்பியவ ளேதுசெய்தாள்
சேலை பிடித்திழுத்தான் கிண்டாத செந்திருவை
வாடியென்று சொல்லி மன்னர் சபைநடுவே
மயிரைப் பிடித்திழுத்தான் மாது விழுந்தாளே
விழுந்ததொரு பத்தினியை வீதி வழியாக
போட்டிழுத்து வந்தானே போக்கிரிப் பயல்தானும்
மண்ணிற் கிடந்து மாது புலம்புகிருள்
பற்றி யிழுத்தான் பாழான துச்சாதனன்
இழுத்துவந்து போட்டான் எடுத்தானே முந்தினை
மற்றவர் கைக்கு வாராத முந்தியது
வேற்றுமன்னர் பாரா வீலைபெற்ற முந்தியது
பற்றி யிழுத்தானே பாழான துச்சாதனன்
அழுதாள் தொழுதாள் ஆதரவு யாருமில்லை
வைத்தாள் சபதம் மாது துரோபதைதான்
வீர வுரைதனை மேவி யுரைக்கலுற்றுள்
ஆரடா என்புடவை அடங்கப் புரட்டியவன்
வன்னப் புடவைக்கு மாற்ற முரைத்தவர்கள்
நகையைக் கழற்றியவர் நாயம் கெடுத்தவர்கள்
சவுரி குலைத்தவர்கள் தாமம் பறித்தவர்கள்
இத்தனைக்கும் காரணமா இருக்குமந்த மாபாவி
துரியோ தனப்பாவி துடிக்கும் படிசெய்து
யுத்த களந்தனிலே செத்துக் கிடக்கையிலே
தொடையிலே ரத்தம் சுழித்து வருகையிலே
உடல்ரத்த மெடுத்து உள்ளங்கையில் தான்ஊற்றி

கூந்தலில் தான்தடவிக் கூறுபிரித் திடுவேன்
சிக்கறுத்துச் சீவி தேர்ந்த சடையிடுவேன்
மாசறுத்துச் சீவி வளர்ந்த முடியிடுவேன்
அன்றுவரை யென்றன் அருங்கூந்த லிப்படியே
புழுதி படியட்டும் பூமி நடுங்கட்டும்
என்று சொல்லி அப்படியே யெடுத்தாள் சபதமதை
அந்த பெருமாட்டி அழகான பாஞ்சாலி
வீரப் பெருமாட்டி மேன்மையுள்ள பாஞ்சாலி
பிறந்த திருநாட்டில் பெண்ணும் பிறக்கலியோ
மாதேவி தன்னுட்டில் வந்து பிறந்திருந்தேன்
என்னுலே இக்கொடுமை இருக்க விடுவேனு
பெண்ணுக்கு வாழ்வு பேணு தமிக்கலுற்றூர்
ஆணுக் கொருநீதி பெண்ணுக் கொருநீதி
ஆகாத நீதியெல்லாம் ஆருக்குச் சொல்லுகிறூர்

அமிர்தவல்லி சபதம் வைத்தது

துரோபதை நாச்சியார் சொன்ன சபதம்போல்
வீம நெடுமன்னன் விளம்பும் விதியதுபோல்
இந்தக் கொடுமை இனிநடக்க வொட்டாமல்
கொடுமை யொழியுமட்டும் கொள்ளுவேன் சபதமென்றுள்
ஒருவேளைச் சோறும் உண்ண மறுத்துவிட்டாள்
நாய்க்குப்போ டும்சோறு நானுண்ப தில்லையென்றுள்
ஆடை பிடுங்கி அணியும் நகைபிடுங்கி
கதவை யடைத்துக் கட்டைபோ லேகிடத்தி
வாராத கண்ணீரை வருந்தி வரவழைத்துப்
பொய்யழுகை யழுது பொல்லாத் திருடரைப்போல்
காவலுக் குள்ளடங்கி கடையழியப் போவதில்லை
இந்தக் கதியில் எனக்கென்ன சாப்பாடு
வழக்கந் தொலைத்து மறுமணமும் தான்செய்து

சந்தோஷங் கொண்டாடி தாலி யெடுத்துக்கட்டி
பட்டாடை யுடுத்திப் பாரில் நகைபோட்டு
மூன்மா திரிசெய்து முடிக்குநாள் ஆகுமட்டும்
தண்ணீர் தவிரச் சாப்பிடேன் ஒன்றுமென்ருள்
செத்தாலும் சாவதல்லால் தீண்டேன் ஒருபருக்கை
சபதம் முடியுமட்டும் சாப்பிடேன் சாதமினி
என்று பெருஞ்சபதம் இட்டாளே மாதரசி
பகலெல்லாம் படுத்திருப்பாள் பாரிரவு தூக்கமில்லை
வருந்தி யழுவாள் மாநிலமெல் லாம்வருந்த
இரங்கி யழுவாள் ஏழுலகும் நடுநடுங்க
இப்படி யாக இருக்கிறேம் பலநாளாய்
என்றுரைத்துத் தாயாரும் இருகண்ணும் நீர்சொரிந்தார்

அமிர்தவல்லி மூர்ச்சை தெளிந்து
எழுந்து கூறுவது

மூர்ச்சை தெளிந்து விழித்தாளே பெண்ணரசி
அசதி தெளிந்து அமிர்தவல்லி தானெழுந்தாள்
தாயா ருரைத்ததெல்லாம் தாரரசி கேட்டீரோ
மாதா வுரைத்ததெல்லாம் மகராசி கேட்டீரோ
நானும் ஒருபெண்தான் நீருமொரு பெண்தானே
பன்னிரண்டு வயதினிலே பண்ணினீர் கல்யாணம்
கல்யாணம் கேட்டேனு காதல் புரிந்தேனு
புருஷ னுடன்கூடிப் போகம் உணர்ந்தேனே
குழந்தை பிறந்ததா கொங்கை சரிந்ததா
ஆசை முதிர்ந்ததா அழகு குறைந்தேனு
கிழவியாய்ப் போனேனு கெண்டை சுருங்கிற்ரு
பேரன் பிறந்தானு பேத்தி முளைத்தாளா
தலையு நரைத்ததா சதையுஞ் சுரித்ததா
பல்லுங் கழண்டதா பவிசு குறைந்தேனு

மணவாளன் செத்தால் மாப்பிளைக்குப் பஞ்சமுண்டோ
மறுமணந்தான் செய்தால் வைபங் கவிழ்ந்திடுமோ
பிள்ளை பிறக்காதோ பிரமன் படைக்காலே
மற்றுமொரு தாலி வாங்காதோ என்கழுத்தில்
பின்னுமொரு தாலி பேயாய்ப் பிடுங்குமோதான்
தாலி யறுத்த தனிப்பெரிய பெண்களுக்கு
கல்யாணம் செய்தல் கடவுளுக்கு ஆகாதாம்
கடவுளுக்கு ஆகாதென்றுல் கருப்பம்வரக் காரணமேன்
தெய்வத்துக் காகாதென்றுல் சிறுவயிறு பெருப்பதென்ன
புருஷ னிறந்தபின்பு பிள்ளைவரக் காரணமேன்
மணவாளன் செத்தபின்பு மாதுகர்ப்ப மாகலாமா
கர்ப்பமுண் டாவதற்குக் கடவு ளருளிருக்க
மறுமணம் கூடாதென்று வையத்தார் கூறுவதேன்
ஆணுக்குக் கல்யாணம் ஆயிரம் நடக்கும்போது
பெண்ணுக்குக் கல்யாணம் பேச மயங்குவதேன்
கல்யாணம் ஆகுமட்டும் கஞ்சி குடிப்பதில்லை
மறுமண மாகுமட்டும் வண்ண உணவுகொள்ளேன்
என்றுரைத்து தான்விழுந்தாள் எழிலான அமிர்தவல்லி
வானம் இடிக்கிறது மழைமுகத்தைக் காட்டாமல்
மின்னிற்று வானம் விடவிடத்துப் போனார்கள்
நடுங்கினன் சோழமன்னன் நரம்பெல்லாம் கட்டுவிட
ஓடுங்கினன் பாண்டிமன்னன் உள்ளம் வெயர்வெடுக்க
பாண்டியன் தேவி பாங்கான ராஜாத்தி
பெண்ணின் குறையால்தான் பிழைகள்வந்து சேர்ந்தது

[காண்

சாஸ்திரியி னலே சார்ந்ததிந்தத் தீங்கென்றுள்
பஞ்சாங்கக் காரன் பண்ணுங் கொடுமையிது
வைதீகத் தாலே வந்தவிதி யென்றுரைத்தாள்

சாஸ்திரிகள்மேல் சோழராஜன் கோபப்படல்

கோப மெழுந்ததுகாண் கோவேந்தன் சோழனுக்கு
ஆங்காரங் கொண்டானே அழகான சோழமன்னன்
ஆரடா சேவகனே அழைத்துவா சாஸ்திரியை
சாஸ்திரத்தைச் சொன்ன சதிகாரப் பாவியைத்தான்
பஞ்சாங்கம் சொன்ன படுபாவி சாஸ்திரியை
நேத்திரத்தைப் பிடுங்கி நேர்மை கெடுத்திடுவேன்
உச்சிக் குடுமியை ஒருநொடியில் பிய்த்திடுவேன்
பஞ்சகச்ச வேட்டியெல்லாம் பஞ்சாப் பறக்கடிப்பேன்
பூணூலைப் பிய்த்துப் பொசுக்கி யெரிக்கிறேன்பார்
தொந்தி வயிற்றைத் துடிக்கப் பிசைந்திடுவேன்
மூக்கதனைப் பிடித்து மூச்சந்தி யில்நாட்டி
காதுகளைப் பிய்த்துக் கடைத்தெருவில் தொங்கவைப்பேன்
உதட்டைத் கிழித்து உயரப் பறக்கடிப்பேன்
கொண்டுவா சாத்திரியைக் குடலைப் பிடுங்குகிறேன்
கண்ணைப் பிடுங்கிக் காக்கைக் கிரையிடுவேன்
ஆரடா தூதுவனே அரைநொடியில் கொண்டுவாரும்
நாட்டைக் கெடுத்துவிட்டான் நாசங்கள் செய்துவிட்டா
நாக்கைப் பிடுங்கி நரியுண்ணப் பார்த்திடுவேன் [ன்
தேசங் கெடுத்துவிட்டான் சீரெல்லாம் போக்கிவிட்டான்
ஊரைக் கெடுத்தான் உலகந் தனைக்கெடுத்தான்
விட்டேனு பாரென்று வெறியாட்ட மாடுகிறான்
பிடிக்க முடியவில்லை பெருமையுள்ள ராசாவை
பாண்டிய மன்னன் பாராளு மன்னனவன்
சோழனைத் தான்பிடித்து சொற்கள் பலசொல்லி
கேளுங்கள் மன்னவரே கெடுதல்வர மாட்டாது
சாந்தமாகக் காரியத்தைச் சாதிப்போ மிப்போது
கோபந் தனையடக்கும் குறைச்ச லொன்றும்வாராது

அறியா தவர்செய்த அநியாய மத்தனையும்
அரசரா யிருப்பவர்கள் அடங்கலும் பொறுக்வேண்டும்
தண்டனைகள் செய்து தற்காக்க நீயுதிண்டு
பதட்டமே வேண்டாம் பார்த்து வழிசெய்வோம்
என்றுரைத்தார் பாண்டியரும் இசைந்தாரே சோழமன்
சாஸ்திரியைத் தேடிச் சார்ந்தாரே தூதுவர்கள் [னன்
மூன்னூறு தூதுவர்கள் முன்னே நடக்கலுற்றார்
ஐநூறு சிப்பாய்கள் அங்கே நடக்கலுற்றார்
ஆயிரம்பேர் சிப்பாய்கள் அதட்டி நடந்தாரே
கத்தியுங் கையுமாக கனத்த உடையுடனே
நடையு மொருதினுசா நடந்தாரே சிப்பாய்மார்
சுற்றி வளைந்தாரே துணிவுள்ள தூதுவர்கள்
பற்றி வளைந்தாரே பாங்கான சிப்பாய்கள்
அக்கிராரம் சுற்றி அங்கே வளையலுற்றார்
சாஸ்திரிகள் அத்தனையும் தள்ளிவந்தார் அரண்மனைக்கு
பெண்களையும் விட்டுவிட்டார் பிள்ளைகளை விட்டுவிட்டார்
உச்சிக் குடுமிவைத்த ஒருவருமே தப்பாமல்
பஞ்சகச்சம் வைத்த பிராமணர்க ளத்தனையும்
தொந்தி பெருத்த சோதாக்க ளத்தனையும்
ஓட்டி விரட்டினர்கள் ஒருநொடியி லப்போது
சாஸ்திரிக ளெல்லாரும் தடுமாறிப் போனர்கள்
என்னவரப் போகுதென்று யார்க்குந் தெரியவில்லை
ஆபத்து வந்ததென்று அறிந்தார்க ளப்போது
தப்பவழி யுண்டோ தார்மன்னன் கோபித்தால்
செத்தோம் இனிமேல் திரும்போ மென நினைத்தார்
நினைப்பதற்கு நேரமில்லை நெட்டினர் சிப்பாய்கள்
இடுப்பில் உதைகொடுத்து வற்றினர் சிப்பாய்கள்
பிடரி பிடித்துப் பெயர்த்துமே தள்ளிவிட்டார்

தள்ளின தள்ளோடே சார்ந்தார் அரண்மனையில்
ஓட்டம் பிடித்து ஓடிவாரார் சாஸ்திரிகள்
விழிகள் பிதுங்குவதும் வேட்டி அவிழ்வதுவும்
பட்டைக்கோ வணங்கள் பாதை பெருக்குவதும்
காலுக்கு முன்னே கனவயிறு முன்போக
பாதை சறுக்கி பல்டி அடிப்பதுவும்
எழுந்து நடக்குமுன்னே எழுநூறு சிப்பாய்கள்
துரத்தி யடிப்பதுவும் சொல்ல முடிந்திடுமோ
சாஸ்திரிகள் எல்லாரும் தான்சேர்ந்தார் அரண்மனையில்
கத்தி யுருவி நின்ருன் கருணையுள்ள சோழமன்னன்
நாட்டைக் கெடுத்த நாசகாலன் யாரென்ருன்
தேசங் கெடுத்தவனே சிரமறுக்க வேணுமென்ருன்
மன்னவரே சற்று மனமாறி நில்லுமென்று
பாண்டியன் கூறிவிட்டுப் பார்த்தானே மற்றபக்கம்
சாஸ்திரி யார்கள் தவிக்கிருர் அவ்விடத்தில்
பாதி யுயிர்போகப் பாதி யுயிர்கொண்டு
என்னசொல்லித் தப்புவதென் றேங்கி நின்ரு ரப்போது
விழிகள் நீலக்குத்தி மேனி யொடுங்கிப்போய்
நாக்குக் கருகி நடுக்கம் பெரிதாகி
பேதை விழிவிழித்துப் பிசைகிருர் கைகளைத்தான்
பாண்டியனும் பார்த்துப் பரிதாபங் கொண்டானே
என்னகாண் சாஸ்திரிகாள் எல்லாம் உரைத்திடுங்கள்
உண்மையெல்லாம் சொன்னுல் உயிர்பெறலா மென்றுரை
சாஸ்திரிகள் கேட்டார் சற்றே பிழைத்தார்கள் [த்தார்
சொல்கிரேம் சொல்கிரேம்சொன்னதெல்லாம் சொல்லு [கிரேம்
உயிர்ப்பிச்சை தாரும் உள்ளதெல்லாம் சொல்லுகிரேம்
என்றுரைத்து நின்ருர்கள் இருகரமுந் தான்கூப்பி

கணவ னிறந்தவுடன் காவல்வைக்கச் சொன்னவரார்
புருஷ னிறந்தாக்கால் பூமறுக்கச் சொன்னவரார்
சேலை உடைமாற்றிச் சீரழிக்கச் சொன்னவரார்
எந்தஎந்த சாஸ்திரிகள் இப்படிக் கூறலுற்றார்
உண்மைதனைச் சொல்வீர் உயிர்பிழைக்கக் கூடுமென்றார்
ஐயா மகராஜா அவர்தலையில் வெள்ளிடிதான்
சொன்னவர் தன்தலையில் சோதியிடி வீழ்ந்ததையா
குமுறி விழுந்ததங்கே குலத்தோ டழிந்தார்கள்
வயிற்றி லிருந்த வான்கருவும் போனதம்மா
வீடு மிடிந்ததுகாண் வீளை நிலமும் பாழாச்சு
மாடுகன்று வீடுமனை மற்ற பொருளெல்லாம்
போன விடமறியோம் பொய்யில்லை யென்றுரைத்தார்
சாஸ்திரத்தை நம்பித் தான்வாழ்வீர் நீரன்றே
என்னசொல்கி றீர்கள் இப்போ தெரியவென்றார்
தொண்ணூறு சென்ற தொடுகிழவன் றனைக்காட்டி
அவர்தான் அறிவார் அபார சாஸ்திரத்தை
கற்றுக்குட்டி நாங்கள் கருத்தறியக் கூடவில்லை
யென்றுசொல்லி யாவர்களும் ஏங்கி நின்றார் அவ்விடத்தி
தொறுதொறு கிழவன் துணிவா யுரைக்கலுற்றான் [ல்
பல்லிலாக் கிழவன் பப்பப் எனவுரைத்தான்
சாஸ்திரத்தில் குற்றமில்லை சாஸ்திரியின் குற்றமது
கடல்போல சாஸ்திரத்தின் கரையறியக் கூடாது
புருஷ னிறந்தால் பெண்விரத மிருத்தல்நலம்
பெண்ணுக்கு ஆசை பெருகி யிருந்தாக்கால்
கட்டுப் படுத்துதற்குக் கனவிலும் கூடிடுமோ
பெண்ணுக்கு ஆசை பெருகுதல் தடுப்பதற்கு
ஆராலு மாகாது ஆபத்து வந்துவிடும்
பெண்ணினது கண்ணீர் பெரிய கொடுமையன்றே

கன்னி வருந்தினுல் காசினியெல் லாம்வேகும்
விதவையா வைக்க வேண்டுமென்ற சாஸ்திரத்தில்
பெண்கண்ணீர் வரலாகா தென்பதே முக்கியங்காண்
மாதுகண்ணில் நீர்வடிதல் மாபா தகமென்றூர்
மனுநீதி சாஸ்திரத்தில் வகுத்துரைத்து விட்டாரே
முன்னுரைத்த சாஸ்திரியார் முற்றும் அறியவில்லை
மற்றுமொரு அத்தியாய வகையறிய வில்லையையோ
வேறுமொரு அத்தியாய விளக்க மறியவில்லை
பெண்கள் நகையின்றிப் பெரிதும் வருந்தினுக்கால்
பிறந்தகுல மழியுமென்று பேசினூர் மனுதர்மம்
அந்த மனுநீதி அப்படியுங் கூறியது
பெண்ணின்கண் ணீர்வடிந்தால் பிழைகள்வந்து சேரா
கடந்த யுகம்போகக் கலியுகத்துத் தருமத்தை [தோ
பராச முனியறிந்து பாங்கா யுரைத்திட்டார்
விதவை துயரறிந்து விளங்க உரைத்துவிட்டார்
பராசரது ஸ்மிருதியிலே பார்த்தால் விளங்குமது
பன்னிரண்டு தன்வருஷம் பார்க்க முடியாமல்
தேசாந் திரமாகச் சென்ற புருஷனைத்தான்
விலக்கிவிட்டு வேறுமணம் விநயமாச் செய்திடலாம்
தீராத நோய்பிடித்துச் சீரழியும் புருஷனையும்
நீக்கிவிட்டு நற்புருஷன் நேரா மணந்திடலாம்
புருஷ னிறந்துவிட்டால் பேச்சே கிடையாது
கல்யாணம் செய்து களிப்பா யிருந்திடலாம்
இப்படி யாக இருக்கிறதே ஸ்மிருதியிலே
பராசரர் செய்த பாங்கான ஸ்மிருதியது
ஆருயிரம் வருஷமுந்தி ஆன ஸ்மிருதியது
பத்தாயிர வருஷமுந்தி பாடின ஸ்லோகமது
வாங்கிப் படித்திடலாம் வண்மையறிந்திடலாம்

பெண்ணுக்கு மறுதாரம் பேஷாகச் செய்திடலாம்
சாஸ்திரத்தில் சொன்ன சங்கதிதான் அத்தனையும்
எல்லார்க்கும் சாஸ்திரத்தில் இடமின்றி யுண்டோதான்
சாஸ்திரம் கடல்போல் தானிருக்கு மல்லாமல்
ஒருகட்சிக் காரருக்கு உதவியா யிருக்குமோதான்
விதவைக்கு வாழ்வு மேலா யிருக்குதங்கே
விதவைக்குத் தாழ்வும் இருக்குதந்த சாஸ்திரத்தில்
பக்கம் புரட்டுவதில் பாத்தியங்க ளுண்டாகும்
சாஸ்திரியைப் பொறுத்தே சாஸ்திரங்கள் பேசி நிற்கும்
படிப்பவர் தனைப்பொறுத்துப் பாடல்கள் பேசி நிற்கும்
மறுதாரக் கல்யாணம் மாதுக்குச் செய்திடலாம்
நானே இருந்து நடத்தி முடிக்கிறேன்
சாஸ்திரம் தவருமல் தன்மை குறைபாமல்
கல்யாணம் செய்யலாம் காரணங்கள் மெத்தவுண்டு
எந்த சாஸ்திரியேனும் என்முன்னே நிற்பானு
வாதங்கள் செய்கிறேன் வழியிருக்கு தென்றுரைத்தார்
சண்டை பிடிக்கிறேன் சாஸ்திரங்கள் பேசுகிறேன்
மேற்கோ ளுரைக்கிறார் வினவறிந்த சாஸ்திரியார்
துவாபர யுகத்திலே சொல்கிறேன் கதையொன்று
கேளுமையா பாண்டியரே கீர்த்தியுள்ள நற்கதையை

பஞ்சபாண்டவர் முதலியோர் விதவையின் வம்ச மென்பதை சாஸ்திரி கூறுவது

காசிராஜன் பெற்ற கனமுள்ள பெண்ணிருவர்
அழகில் சிறந்தவர்கள் அறிவு மிகுந்தவர்கள்
இருவரும் அழகில் இணையில்லா மாதுநல்லார்
ஒருமா திரியாக உயர்ந்திருக்கும் உத்தமிகள்
அக்காளுந் தங்கையுமாய் அழகு ஜொலிக்கிறார்கள்
பருவகாலப் பேரழகு பார்க்க முடிந்திடுமோ

கலியாணப் பேச்சு கடும்பேச் செழுந்ததுகாண்
சுயம்வரந் தான்வைத்தார் சுந்தரிகட் கப்போது
அழகிற் சிறந்தவர்க்கு அளிப்போம் இருவரையும்
என்றுசொல்லிக் காசிராஜன் எங்குமே ஓலைவிட்டான்
சுயம்வர ஓலைதனைத் துடுக்காச் செலவிடுத்தான்
ஐம்பத்தாறு தேச அரசர்களும் வந்தடைந்தார்
இளவரச ரெல்லாரும் ஏகி வழிநடந்தார்
காசிப் பழம்பதியில் கங்குகரை யில்லாமல்
சேர்ந்ததே கூட்டமது சீரான ராசர்களாய்
ராஜாக்கள் கூட்டம் நகரமது கொள்ளாமல்
சிற்றரசர் கூட்டம் திசையை மறைத்ததுகாண்
அரச ருடன்வந்த ஆனை குதிரைகளும்
தேரும் படைவிதமும் செப்புந் தரமாமோ
அரசர் பெருங்கூட்டம் அணைகடந்த கூட்டமது
தேனுக்கு வண்டு சென்று சுழல்வதுபோல்
கரும்பு ருசிதேடிக் கட்டெறும்பு அலைவதுபோல்
நெய்வா சனைகண்டு நிறையும் எறும்பினைப்போல்
வந்து புகுந்தார்கள் மண்ணரச ரெல்லாரும்
பாண்டவரின் பாட்டன் பாங்கான மன்னவனும்
ஐவருக்கும் பாட்டன் அழகான விசித்திரவீரியன்
துரியோ தனன்பாட்டன் தோள்பலத்தில் மிக்கவனும்
அருச்சுனர்க்குப் பாட்டன் அசகாய சூரனவன்
வீட்டுமனர் தம்பி வெற்றி விறல்வீரன்
வீரம் மிகுந்தவன்காண் மேதினியை ஆண்டிருந்தான்
ஐம்பத்தாறு தேசம் அடங்கலும் ஆண்டிருந்தான்
பெண்கள் அழகினிலே பிரியங்கொண்டு விட்டானே
காசிராஜன் பட்டணத்தைக் கருதி வழிநடந்தான்
வீட்டுமருங் கூட மேவித் தணைவந்தார்

தங்க ரதமேறி சதுரா வழிநடந்தார்
காசி நகரடைந்தார் கண்டார்கள் ராஜகூட்டம்
கண்ணை மறைக்குதுகாண் காசினி மன்னர்கூட்டம்
எல்லாதேச ராஜர்களும் இடமின்றிச் சுழலுகிறார்
பெண்பெண் ணெனக்கூறிப் பிதற்றித்திரிகிறார்கள்
அழகான மன்னவர்கள் ஆயிரம் பேருண்டு
என்னசெய்வ தென்று ஏங்கினன் விசித்திரனும்
அப்போது காசிராஜன் ஆணழக ரேதுசெய்தார்
வீட்டுமரைத் தம்பியுடன் விரும்பி வரவேற்றார்
பெரியமன்னர் வந்ததற்குப் பெருமை யடைந்தாரே
மாமன்னர் வந்ததற்கு மகிழ்ச்சி யடைந்தாரே
அரண்மனைக்குக் கூட்டிபோய் ஆசனங்கள் போட்டாரே
சிம்மா சனமிட்டார் சீராய் அமர்த்திவைத்தார்
ஆயிரம்பேர் சமையல்காரர் அழகாய் நடத்துகிறார்
பத்தாயிரம் சமையற்காரர் பாகங்கள் செய்கிறாரே
ராஜாக்கள் சமையலைத்தான் நவில முடிந்திடுமோ
பந்தி பரிமாறினர் பார்த்தார் இலைகளைத்தான்
தலைவாழை இலைபோட்டார் சாதங்கறி படைத்தார்
மலைபோல வெண்சோறு வாகான கறிவகையும்
சேரப் படைத்தார் திகைத்தார்கள் மன்னவர்கள்
வைத்ததொரு சோறு மலையாய் மறைக்குதங்கே
கையெட்ட மாட்டாமல் கறிகளெல்லா மிருக்குதங்கே
பருப்பு ஒருகுடமாம் பசுநெய்தான் முக்குடமாம்
மலையின்மே லாறு வழிந்தோடும் பாவனையாய்
ஊற்றிவிட்டார் நெய்யை உண்ண முடிந்திடுமோ
நெய்யோ தயிரோ நீராக ஓடுதங்கே
ஆறாக ஓடினதாம் அருமையுள்ள நெய்பால்கள்
கடலாப் பெருகினதாம் கல்யாண மழமழப்பில்

பொறுக்கப் பிடித்தார்கள் போர்மன்ன ரெல்லாரும்
சாப்பாட்டுப் பஞ்சம் தணிந்ததே ஜனங்களுக்கு
பெண்கிடைக்கா விட்டாலும் பெலமான போஜனங்கள்
கிட்டியதே போதுமென்று கிடந்தார் பலமன்னர்
யாருக்குப் பெண்கிடைத்தால் நமக்கென்ன கவலையென்று
தின்று புரண்டார்கள் சேர்ந்த மனிதரெல்லாம்
உண்டு புரண்டார்கள் ஒதுக்குப் புறங்களிலே
சாப்பிட்டு உருண்டார்கள் தனியான திண்ணைகளில்
அடுத்தநாள் காலையினில் அலங்கார மண்டபத்தில்
மன்னரெலாம் ஆசனத்தில் வந்து நிறைந்தார்கள்
கண்கொள்ளாக் காட்சியது கண்டார்க ளவ்விடத்தில்
பெண்க ளிருவரையும் பேணி யழைத்தார்கள்
அலங்காரம் செய்து அழைத்துவந்தார் சேடியர்கள்
மண்டபத்தில் பெண்கள் மயில்போல் நுழையலுற்றார்
கண்டு மிரண்டார்கள் காவலர்க ளெல்லாரும்
கண்ணை விழித்துக் கண்டார்கள் பெண்ணலத்தை
அழகு முழுமையும் அவர்கள்விழி கொள்ளவில்லை
விழியைப் பெரிதாக்க வெகுபாடு பட்டார்கள்
புருவத்தை விரித்துப் போராடி நின்றார்கள்
கையால் புருவத்தைக் கனக்க விலக்கியேதான்
அகலப் படுத்தி அப்பாலே பார்த்தார்கள்
இமையும் பொருதாமல் இருந்து விழித்தார்கள்
மூன்மயிரைக் கோதி முகந்திருத்திக் கொண்டார்கள்
கிரீடஞ் சரிப்படுத்தி கெச்சை யிருக்கிக்கொண்டார்
முகத்தைத் துடைத்து மீசை திருத்தினர்கள்
புன்சிரிப்புக் காட்டி புறமெங்கும் சீர்செய்தார்
நெஞ்சை நிமிர்த்து நேராக உட்கார்ந்தார்
தோளை வளத்துச் சொரூபம் திருத்தினர்கள்

அழகு நிறைந்ததென்று அங்கஞ் சரிபார்த்தார்
முன்னும் பின்னும் பார்த்து முறுக்காக வீற்றிருந்தார்
அழகான மன்னவர்கள் ஆயிரம் பேரிருந்தார்
இருந்தும் பயனென்ன ஏங்கியே வீங்கினர்கள்
மணப்பெண் ணிருவருமே வகையறிந்து வாரார்கள்
வந்திருந்த மன்னர்களின் வயணமெலா மப்போது
சேடியர்கள் கூறித் திரமா வருகையிலே
பூமாலை கையேந்திப் பெண்கள் நடக்கலுற்றார்
ஒவ்வொரு மன்னரையும் ஓர்ந்து வருகிறார்கள்
பலதேச மன்னரையும் பார்த்துமே வாரார்கள்
வீற்றிருந்த மன்னவரை விலகி வருகிறார்கள்
அழகில்லை யென்றுசொல்லி அப்பாலே வருகிறார்கள்
பார்த்தாரே வீட்டுமரும் பசையிலலை யென்றுணர்ந்தார்
தம்பிக்கு மாலைசூட்டத் தனிப்பெண்கள் நாடாக்கால்
அழகுசரி யில்லையென்று அப்பாலே போனக்கால்
மானங் குலைந்துவிடும் மதிப்புத் தொலைந்துவிடும்
ஐம்பத்தாறு மன்னர்முன்னே அவமானம் வந்துவிடும்
என்று கருதி ஏதுசெய்தார் வீட்டுமரும்
பெண்ணிரண்டுங் கைப்பற்றிப் பெரியரத மேற்றிவிட்டார்
மணப்பெண் இருவரையும் வாரியே தூக்கினரே
தேரிலே ஏற்றிவைத்துச் செல்ல முனைந்தாரே
பெண்ணிரண்டும் தம்பிக்குப் பேணி மணமுடிப்பேன்
தம்பிக்குப் பெண்ணிரண்டும் தனியே மணமுடிப்பேன்
மறுபேச்சுப் பேசினுல் வாயை அறுத்திடுவோம்
வீரனுக்குப் பேச்சு வில்லிலே தானுண்டு
என்றுசொல்லி வீட்டுமனுர் ஏழுந்துசென்று ரவ்வேளை
கண்டாரே வந்திருந்த காவலர்க ளெல்லாரும்
வீணர்களா நாங்கள் மேதினி மன்னரெலாம்

வந்திருந்த மன்னரெல்லாம் மடையராப் போனோமா
மூட்டாளா நாங்கள் மூடிமன்ன ரல்லோமா
சுயம் வரம் வைத்தால் சோரத்துக் கிடமுண்டோ
பெண்கள் விரும்புகிற பேரரசன் மாப்பிளையா
வம்புக்குவந்த வழிப்போக்கன் மாப்பிளையா
என்ன அநீதியது என்று கிளப்பினர்கள்
மன்னரெலாம் சீறி வரிந்தார்கள் கச்சைதனை
கச்சையிறுக்கிக் கைதனிலே வில்லெடுத்தார்
ஐம்பத்தாறு தேசமன்னர் அடங்கலும் சேர்ந்தார்கள்
மீசை முறுக்கினர்கள் வீறிட் டெழுந்தார்கள்
கண்கள் பொறிபறக்கக் கடுங்கோபமானர்கள்
நாலு திசையு நின்று நாகசர்ப்பம் போற்பாணம்
வில்லிலே கோர்த்து விட்டாரே ராஜாக்கள்
வந்து விழுந்ததே மழைபோல பாணங்கள்
சேர்ந்து விழுந்ததே தேகமெலாம் பாணங்கள்
வீட்டுமனுர் மேலே வீசுரூர் பாணங்களைக்
கண்டாரே வீட்டுமனுர் காவலரின் பாணங்களை
வில்லை வளைத்தாரே வீரரந்த வீட்டுமரும்
பாணந் தொடுத்தாரே பாரரசர் வீட்டுமரும்
வந்தகொடும் பாணங்கள் வலசைவாங்கிப் போயினகாண்
சேர்ந்த கொடும் பாணம் திசைதப்பிப் போயினவே
தூண்டிவிட்ட பாணமெலாம் சுக்கல்சுக்க லாயினகாண்
மன்னர்விட்ட பாணமெலாம் மண்ணிற் கிடந்தனவே
அரசரெலாம் கைசலித்தார் அம்புஞ் சரியாச்சு
வீட்டுமர் விட்டபாணம் வெளிப்பட்டு வந்தனகாண்
சீறி வருகிறதாம் தித்திரிப்பு செய்கிறதாம்
குமுறி வருகிறதாம் கொடுமை புரிகிறதாம்
வில்லின் கயிறுகளை வெட்டி யெறிகிறதாம்

அம்போடு கையை அறுத்துமே வீழ்த்துறதாம்
தலையை அறுக்கிறதாம் தள்ளி மிதிக்கிறதாம்
தேரை உடைக்கிறதாம் சிரசைப் பிளக்கிறதாம்
மன்னரெல்லாம் ஓடுகிறார் மாசனங்கள் கேலிசெய்ய
காவலர்கள் ஓடுகிறார் கால்கள் குடுமிதட்ட
பந்தய ஓட்டம் பார்க்க முடிந்திடுமோ
அரசர்கள் ஓடுவதில் அதிகசக்தி யுடையாரென்று
எல்லாருங் காண எடுத்தார் கடும்ஓட்டம்
யானை யொருபக்கம் குதிரை யொருபக்கம்
ஓடித் துரத்தினவே ஒன்றும் விளங்காமல்
அரசர் தானைத்துரத்தி ஆனைகள் ஓடினகாண்
மன்னர் தமைத்துரத்தி வந்ததே குதிரையெலாம்
ஒன்றையொன்று துரத்தி ஓடிப் பரந்தார்கள்
திசைக்குத் திசையோடித் திகைத்தார்க ளப்போது
சுயம்வரக் கூத்து சொல்ல முடியாது
கலயாணக் கூத்து கடுங்கூத்தாய் நடந்ததங்கே
மன்னர்கள் கூத்து வாய்த்த பெருங்கூத்து
கண்டு சிரித்தாரே காவலராம் வீட்டுமரும்
பார்த்துச் சிரித்தாரே பாராளும் வீட்டுமனார்
தம்பியையும் பெண்களையும் தனியே ரதத்தேற்றி
ஓட்டியே சென்றார் உயர்ந்த அத்தி புரிக்கு
மங்கை யிருவரையும் மணஞ்செய்த மன்னவன்காண்
விசித்திர வீரியனும் மேன்மையுள்ள மன்னவனும்
மெத்தநாள் வாழவில்லை விரைவி லிறந்தானே
அதிகநாள் வாழ்வில்லை அவசரமாய் மாண்டானே
அரசாளப் பிள்ளையில்லை அழுதார்கள் பெண்ணிருவர்
இருபெண்ணுக் கொருகணவன் இறந்தானே யென்று

[சொல்லி

அழுதார்கள் அப்போது அறிந்தாரே பீஷ்மரவர்
சிறுபெண்கள் வாழ்விழந்தார் தேசத்தில் மன்னனில்லை
அரசாளப் பிள்ளையில்லை ஆகும் வகையென்ன
வேறூர் குலத்தினிலே விலைக்குக் குழந்தைபெற்று
மற்றூர் குலத்தனிலே மஞ்சன் அழைத்துவந்தால்
என்ன பலனுண்டு இருபெண்க ளிருக்கையிலே
பெண்ணிரண்டு பேரும் பிள்ளை பெறும்பருவம்
கிழண்டி நரைக்கவில்லை கேடொன்று மாகவில்லை
புருஷ னிறந்தால் பெண்க ளிருக்கிறார்
புருஷ னிறந்தால் பிள்ளை பெறுவார்கள்
புருஷ னிறந்துவிட்டால் பிள்ளை உதவுதற்கு
வேறு புருஷர் மேதினியில் கிடையாதா
மனைவி யிறந்தால் மறுதாரம் தான்செய்து
பிள்ளை பெறுவது பேருலகில் மரபாகும்
அப்படியே தன்புருஷன் ஆணழகன் போனக்கால்
மற்று மொரு புருஷன் வசத்தில் கருக்கொண்டு
பிள்ளை தனைப்பெற்றுப் பெரியகுடி யாவதனால்
மோசமொன்று மில்லையென்றூன் முழுதுணர்ந்த வீட்டு
வியாச முனிவரை வேண்டி யழைத்தார்கள் [மனும்
வேதம் வகுத்த வியாசமுனி வந்து நின்றூர்
அழைத்ததற்குக் காரணத்தை அறிய உரையுமென்றூர்
கூப்பிட்ட காரணத்தைக் குறிப்பா யுரையுமென்றூர்
பட்டத்து மைந்தன் பாராள வில்லையையா
அரச னிறந்துவிட்டான் அரசியர்கள் வாலிபங்காண்
குழந்தை உதவிசெய்யக் கூப்பிட்டோம் உம்மையென்றூர்
மைந்தன் உதவிசெய்ய வரவழைத்தோம் உம்மையென்றூர்
வேதங் கரைகண்ட வியாசமுனி யேதுரைப்பார்
கல்யாணம் செய்து கட்டுப் படமாட்டேன்

குழந்தை பெறமட்டும் கூடுமென்று சொன்னரே
மஞ்சன் உதவிசெய்ய மறுக்கவில்லை யென்றுரைத்தார்
அப்படியே வியாசமுனி அந்த இருவருடன்
கூடிக் கலந்து குழந்தைகர்ப்ப மாக்கிவிட்டார்
மாத மிருவருக்கும் வயிற்றில்கர்ப்ப மாக்கினரே
இருபெண் ணும் இருகுழந்தை எழிலாகப் பெற்றரே
திரிதராட் டினனும் சீரான பாண்டுவுந்தான்
பிறந்தார் இருகுழந்தை பேணி வளர்த்தாரே
திரிதராட் டிரமன்னன் சீரான பாண்டுமன்னன்
இருவரும் அரசிருந்து இந்த உலகமெலாம்
ஆண்டு சிறந்தார்கள் அழகான மன்னவராய்
பாண்டுமன்னன் பெற்றவர்கள் பாண்டவர்கள் ஐவரும்
திரிதராட் டிரன் பெற்றுன் தீயர்துரி யோதனரை [தான்
மற்றகதை யெல்லாம் வையகத்தார் தானறிவார்
விதவையர் பெற்றதுதான் மேலான பாரதங்காண்
துவாபர யுகத்தினிலே தோன்றியது இந்தவிதம்
கலியுகத்தில் விதவையர்க்குக் கல்யாணம் கூடாதா
பேஷாகச் செய்யலாம் பிசகொன்று மில்லையென்றார்
தப்பிதங்க ளில்லையென்று சாதித்தார் சாஸ்திரியார்
வேதமொரு புராணம் மேலான சாத்திரங்கள்
இதிகாச மெல்லாம் இதற்கா தரவென்றார்
சாஸ்திரத்தி லெந்தத் தடையுமில்லை யென்றுரைத்தார்
இச்சேதி கேட்டு எழிலான பாண்டியனும்
எல்லாஞ் சரிதானே எங்குள்ளான் மாப்பிளைதான்
மாப்பிளைக்கு என்ன வகைசெய்வ தென்றுரைத்தார்
நாட்டு வணிகரெல்லாம் நாடுவிட்டுப் போனார்கள்
தேசம்விட்டுப் போனார்கள் சேர்ந்த வணிகரெல்லாம்
வலசைவாங்கிப் போனார்கள் வழியுந் தெரியவில்லை

சோழதேச வணிகரெலாம் தூரதேசம் போனரே
மாப்பிள்ளை யொருவனை வரவழைக்க வேண்டுமென்றார்
நல்லதொரு மாப்பிள்ளையை நாம்பார்க்க வேண்டுமென்றார்
அந்தவொரு சேதியைத்தான் ஆணழகன் கேட்டானே
தொண்டித் துறைமுகமாம் ஜோரான பட்டணமாம்
பாண்டித் துறைமுகமாம் பாங்கான பட்டணமாம்
தெற்குக் கடலருகே சிறந்திருக்கும் பட்டணமாம்
அந்தவொரு பட்டணத்தில் அஞ்சுவகை வணிகர்பலர்
வாழ்வணிகர் தங்கோமான் மன்னுதன பாலன்காண்
சீர்வணிகர் தங்கோமான் செல்வன்தன பாலன்காண்
தனபாலன் பிறந்ததுதான் சதுரான தொண்டிநகர்
தொண்டி தனிற்பிறந்து தொல்மதுரை சென்றானே
மதுரைப் பதிசென்று வளமான வியாபாரம்
செய்து சிறப்படைந்தான் சீரான தனபாலன்
செல்வத்தில் குபேரனவன் சிறந்த புகழுடையான் [ளான்
மன்னருக்குக் கடன்கொடுக்கும் வலிமைபெற்ற செல்முள்
அரசருக்குக் கடன்கொடுக்கும் அளவற்ற செல்வமுள்ளான்
தொண்டித் துறைமுகத்தில் சூழ்ந்திருக்கும் கப்பல்களில்
தனபாலன் பேர்போட்ட தனிக்கப்பல் நூறுநிற்கும்
காலையிலும் மாலையிலும் கப்பல்வரத் தப்பாது
யார்கப்பல் நின்றாலும் தனபாலன் கப்பல்வரும்
தப்பாத கப்பல் தனபால னென்றுரைப்பார்
செல்வஞ் சிறந்த திறமையுள்ள தனபாலன்
அறிவு சிறந்த ஆணழகன் தனபாலன்
தனபாலன் பெற்றதொரு சதுரான கொற்றவனும்

அமிர்தவல்லியைக் கல்யாணம் செய்துகொள்ள
செல்வபதி முன்வருதல்

செல்வபதி யென்னும் சீராள னப்போது

பாண்டிமன்னன் பாதம் பணிந்து நின்று சொல்லுகிறான்
எங்கள் குலத்துக்கு இழுக்குவந்து சேர்ந்ததையா
வணிகர் குலத்துக்கு மாசுவந்து சேர்ந்ததையா
சோழ நிலத்துக்குத் துன்பம்வரக் காரணமா
எங்கள் குலத்தார் இருந்துவிட்டா ரிப்பொழுது
அந்தக் குறையை அரைநொடியில் தீர்த்திடுவேன்
குலத்துக்கு வந்த குறையைநான் தீர்த்திடுவேன்
எனக்குக் கலியாணம் இன்னும் நடக்கவில்லை
வாழ்விழந்த பெண்ணுக்கு மாலையிடச் சம்மதித்தேன்
கணமிழந்த பெண்ணைக் கலியாணம் செய்திடுவேன்
என்றுரைத்து நின்றான் இளவீரன் செல்வபதி
வாயுரைத்து நின்றான் மாவீரன் செல்வபதி
கேட்டார்கள் மன்னவர்கள் கேடில்லா வார்த்தைதனை
செல்வபதி வார்த்தை தேர்ந்தார்கள் மன்னவர்கள்
மதுரைச் சனங்களுடன் வந்தவனும் செல்வபதி
செல்வன்மக னுனலும் தெளிவிரக்கங் கொண்டவன்காண்
சோழனிலம் வறண்டு துயரப்படுஞ் சேதி
தெரிந்து புறப்பட்டான் சீரான செல்வபதி
மாசனங்க ளோடு வந்துவிட்டான் செல்வபதி
வந்த விடத்தில் மணங்கூடி விட்டதுகாண்

கலியாணத்துக்கு வரும்படி தனபாலனுக்குத்
திருமுக மனுப்பியது

தகப்பனுக்குத் தூதுவரைத் தானனுப்பி வந்தார்கள்
தனபால னுக்குத் தனித்தூ தனுப்பினார்கள்
வாயுவேக மாக வாரார்கள் தூதுவர்கள்
காண்டா வனந்தாண்டி கதலிவனங் கடந்து
வனமாய் வனங்கடந்து வாரார்கள் தூதுவர்கள்
பாண்டி மன்னன் ஓலைதனைப் பாங்காக் கொடுத்தார்கள்

கல்யாண ஓலையைக் கருத்தாக் கொடுத்தார்கள்
பார்த்தார் தனபாலன் பணிந்து பிரித்தாரே
ஐயா தனபாலா அறிவு மிகுந்தவரே
செல்வம் மிகுந்தவரே சிறப்பு நிறைந்தவரே
சோழதேசம் போனதைச் சொல்ல முடியாது
நாடழிந்து மூற்றும் நாசமடைந்ததையா
காரணத்தைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டோம்
சிறுபெண்ணைத் தாலிகட்டி திருமணத்தைச் செய்துவிட்
[டார்
மணவாளன் சென்று மடிந்துவிட்டான் அப்புறத்தில்
பெண்ணைக் கொடுமைசெய்து பேதப் படுத்திவிட்டார்
சேலை யுடைமாற்றிச் சிறந்த நகைகழட்டி
படுத்தாத பாடு பலவும் படுத்திவிட்டார்
அந்தக் கொடுமையினால் அவளழுத கண்ணீரால்
பாலப் பருவப் பாஞ்சாலி கண்ணீரால்
சின்னஞ் சிறுகுரலில் திகைத்தழுத கண்ணீரால்
நாடுகா டாகி நல்லறங்கள் பட்டதையா
வணிகர் குலத்தில் வந்ததொரு பெண்ணவாள்காண்
மறுதாரக் கல்யாணம் மாதுக்குச் செய்யவேண்டும்
உங்கள்மகன் செல்வபதி உறுதிகொண்டா ரிப்போது
வாழ்விழந்த பெண்ணை மறைக்க மனங்கொண்டார்
ஆதலால் தாங்களும் அரைநொடியில் பயணம்வைத்து
சீக்கிரமே வந்து சேரவேண்டும் ஐயாவே
தேசத்தைக் காப்பாற்றச் சீக்கிரமா வந்துசேரும்
என்றெழுதி யிருந்ததனை இன்பமாய் படித்தாரே

தனபாலர் சந்தோஷத்துடன் புறப்படுதல்

நல்லபிள்ளை பெற்றேன் ராஜாக்கள் தான்மெச்ச
பிறந்த பயனைப் பிள்ளையவன் பெற்றுவிட்டான்

என்று மகிழ்ந்தார் எழிலான தனபாலன்
மனைவி யிடம் சொல்லி மகிழ்ச்சி யடைந்தாரே
துணைவி யிடம் சொல்லித் துரிசாப் பயணமென்றார்
இருவரு மாக எழுந்தார் பயணமதாய்
காடு செடிதாண்டிக் கனத்த வனங்கடந்து
வனமாய் வனங்கடந்து வந்தார் இருகினத்தில்

கல்யாணப் பந்தலில் காட்சி

கல்யாணப் பந்தல் கண்கொள்ளாக் காட்சியது
பொட்டல் தனைமறித்துப் போட்டார்கள் பந்தல்தனை
தென்னங்கீத் தாலே சிறந்தபந்தல் போட்டார்கள்
ஆயிரம்பேர் நின்று அழகான பந்தலிட்டார்
அலங்காரப் பந்தலது ஆர்க்கும் முடிந்திடுமோ
உலகத்தி லில்லாத உயர்ந்தநல்ல மாதிரியில்
வேலை முடித்தார்கள் மேன்மையுள்ள மந்திரிகள்
அலங்கார மாக அமைத்திருந்தார் மந்திரிகள்
தேசமக்க ளெல்லாரும் சேர்ந்திருந்தார் பந்தலிலே
நாற்பதா யிரம்பேர்கள் நாடியங்கே வீற்றிருந்தார்
ஐம்பதா யிரம்பேர்கள் அழகாக வீற்றிருந்தார்
இடமுமே கொள்ளவில்லை எழுந்து நின்றார் லட்சம்பேர்
கண்கொண்ட தூரமட்டும் கருதி நின்றார் மாசனங்கள்
எட்டின தூரமட்டும் இடமின்றி நின்றார்கள்

மாப்பிளை மணவறைக்கு வருதல்

திருவாளன் செல்வபதி சீரான மாப்பிளைதான்
மணவாளன் செல்வபதி மகிழ்ச்சிமிகக் கொண்டானே
செல்வபதி மாப்பிளையைச் சிறப்பா அலங்கரித்தார்
பல்விதமா நகைகளினால் பாங்கா யலங்கரித்தார்
இளமைப் பெருவீரன் எழிலா விளங்கினனே
வளமை மிகவுடையான் மாப்பிளையாத் தோன்றினனே

அரச ரிருவருந்தான் அழைத்துவந்தா ரப்போது
சோழனும் பாண்டியனும் துணையாக வந்தாரே
மாப்பிளையின் இருபுறத்தில் வந்தாரே மன்னவர்கள்
தகப்பனார் தன்னுடனே தான்வந்தான் செல்வபதி
மாப்பிளையைக் கொண்டு மண்டபத்தி னுள்நுழைந்தார்
கல்யாண மண்டபத்தில் காத்திருந்தோ ரெல்லாரும்
ஆசி வழங்கினார்கள் ஆரவாரம் செய்தார்கள்
சந்தோஷங் கொண்டு சத்தமிட்டார் மாசனங்கள்
மாப்பிளையைக் கூட்டி மணையி லிருக்கவைத்தார்

பெண்ணுக்கு அலங்காரம் செய்தல்

அந்தப் புரந்தனிலே அரசியர்க்கு முன்பாக
பெண்ணை அலங்கரித்தார் பெருமைபெற்ற சேடியர்கள்
அமிர்தவல்லிப் பெண்ணுக்கு அலங்காரம் செய்தார்கள்
நகையின் பெருமையெல்லாம் நாமுரைக்க ஆகாது
ராஜாங்க நகையெல்லாம் நங்கைமேல் கண்டோங்காண்
உயர்வான நகையெல்லாம் உத்தமிக்குத் தந்தார்கள்
பூட்டி யலங்கரித்த பெருநகைக்கு எல்லையுண்டோ
இழையா யிரம்பெற்ற எழிலான பட்டதுதான்
தங்கநூ லாலே சமைந்ததொரு பட்டுடுத்தி
ஒட்டியாணம் போட்டு உடம்பை யலங்கரித்தார்
வயிரத்தால் ஒட்டியாணம் மாதுக் கணியலுற்றார்
காதிலே போட்ட கனவயிர ஓலையது
காத வழிதூரம் கண்ணைப் பறிக்குதுகாண்
மூக்கிலே பில்லாக்கு முக்காதம் டாலடிக்கும்
சொல்ல முடியுமோ சோடித்த சோடினைதாம்
ஆயிரம் தாதியர்கள் அழகாகச் சோடித்தார்

பெண்ணின் சிறப்பு

நெற்றி யழகின்மேல் நீண்ட கருங்கூந்தல்

பின்னிச் சடையிட்டுப் பின்காலைத் தொட்டு நிற்கும்
பின்ன லழகினைத்தான் பேச முடிந்திடுமோ
சடையின் அழகினைத்தான் சாற்ற முடிந்திடுமோ
கண்ணின் கருவிழியும் கருத்துள்ள செவ்வரியும்
தாமரைப் பூவினுள்ளே தனி நீலம் பூத்ததென்ன
கண்டோர் வசப்படவே கடைக்கண் ஜொலித்ததுகாண்
கண்ணில் ஒளிவீசிக் காந்தமெனத் தானிழுக்கும்
சிவந்த திருவாயும் சேர்ந்தமுத்து மாலையைப்போல்
பல்லின் நிலவொளிதான் பக்கமெல்லாம் சோதிவிடும்
வாயைத் திறந்தால் வார்த்துவரும் தேனூற்று
சொல்லைத் திறந்தால் துவண்டுவரும் தேனூற்று
பெண்ணிற் சிறந்தவளைப் பேசுகின்ற தெய்வகதை
தேசம் செழிக்கவந்த செந்திருவாம் பெண்ணமுதை
மாதிற் சிறந்த மகராஜிப் பெண்ணணங்கை
அமிர்தவல்லி நாச்சியாரை அழைத்துவந்தார் மணவறை

[க்கு

அமிர்தவல்லி நாச்சியாரின் அங்கமெலாம் தங்கமயம்
தங்க மயமாகத் தானிருந்தாள் அமிர்தவல்லி
வயிர மயமாக வாய்ந்திருந்தாள் அமிர்தவல்லி

கல்யாண வைபவம்

நவரத்ன மயமாக நாயகியாள் நின்றாளே
அமிர்தவல்லி நாயகியை அரசியர்கள் கூட்டிவந்தார்
மண்டபத்தி னுள்ளே வந்தாள் மணமகளும்
மணவரையில் பெண்ணரசி வாகா யிருந்தாளே
கோணமல் நாணமல் குந்தி யிருந்தாளே
நாணமல் கோணமல் நன்று யிருந்தாளே
பாண்டிய நாடாளும் பார்த்திபனர் தன்மனைவி
சோழவள நாடாளும் தோன்றல் திருமனைவி

இருவரும் பெண்ணருகே இருந்தா ரழகாக
மாப்பிளையின் பக்கத்தில் மன்னவர்கள் வீற்றிருந்தார்
தந்தை தனபாலர் சார்ந்திருந்தா ரருகினிலே
தாயாரும் வீற்றிருந்தாள் தன்மகனின் பக்கத்திலே
ஐம்பத்தாறு தேச அரசர்களும் வந்திருந்தார்
ஆயிரம் ஜதைமேளம் அடித்து முழக்கினர்கள்
பாண்டுவாத்தியகோஷம் பாரெங்கும் கேட்டிருக்கும்
பத்தாயிரம் ஐயர்மார் பண்ணினர் ஓமகுண்டம்
நெய்யை நெருப்பிலிட்டு நீள வளர்த்தார்கள்
பெரியதொரு புரோகிதரும் பேணி நடத்தினரே
திருமணத்தைத் தான்நடத்தி செல்வங்கள் ஓங்கவென்று
அச்சதைகள் தூவினர் ஐயர்மா ரெல்லாரும்
கல்யாணச் சடங்குகளைச் கணக்காகச் செய்தார்கள்
சடங்கெதுவும் தப்பவில்லை சாஸ்திரிகள் பார்த்திருந்தார்
வந்திருந்த சனங்களெல்லாம் மகிழ்ச்சி யடைந்தார்கள்
கூடிய சனங்களெல்லாம் கொண்டாட்ட மானார்கள்

சோழராஜன் சீதனங் கொடுத்தது

கல்யாண சாமான் கணக்கி லடங்காது
சீதனச் சாமான் செப்ப முடிந்திடுமோ
பட்டத்து ராஜாத்தி பாண்டியன் மாதேவி
சோழன் திருத்தேவி சொகுசான ராஜாத்தி
இருவரு மாக எல்லாரும் சேர்த்துவிட்டார்
தங்க நகைகளுக்குச் சமனுண்டோ பூதலத்தில்
வயிரநகைக்கு மாகிரியும் உண்டோதான்
வளையலில் நூறுவிதம் வான்காப்பில் நூறுவிதம்
சங்கிலியில் நூறுவிதம் தாழம்பூ நூறுவிதம்
ஓலையிலே நூறுவிதம் உயர்சுட்டி நூறுவிதம்
மோதிரத்தி லொருநூறு முத்துமாலை பத்துவிதம்

வயிரம் பதித்ததொரு வளமான மாலைகளாம்
மாணிக்கக் கல்பதித்த மாலையிலே நூறுதரம்
தங்கத்தில் பாதசரம் தங்கத்தில் சிலம்புகளாம்
வயிரச் சிலம்புகளாம் மாணிக்கப் பாதசரம்
பச்சை பதித்துப் பவளமொரு சுற்றுவைத்து
வயிரம் இடைபெய்து மாணிக்கச் சரட்டினிலே
கோர்த்த பதக்கங்கள் கொஞ்சமல்ல கொடுத்தார்கள்
தங்கத்தால் செய்த தாம்பாள மெத்தனையோ
தங்கக் குடங்களும் தங்கத்தாற் சட்டிகளும்
தங்கத்தால் செம்பும் தங்கத தமிளர்களும்
எண்ண முடியாது எடுத்ததொரு சீதனத்தை
முப்பது கிராமத்தை முறையாக் கொடுத்தார்கள்
சீதனமாக் கொடுத்தார் சீரான கிராமங்களை
ஆயிரம் பசுக்கள் அளவில்லாப் பால்பொழியும்
தானே தெருவில் தாரையெனப் பால்பொழியும்
வண்டிகளும் தேரும் வகைவகையா வாகனமும்
சொல்ல முடியுமோ சோழனது சீதனங்கள்
எல்லாங் கொடுத்து இன்பமுற்றான் சோழமன்னன்

கல்யாணச் சாப்பாடு

வந்திருந்த மாசனங்கள் மனமார உண்பதற்கு
வடித்ததொரு சோற்றின் வகையுரைக்க முடிந்திடுமோ
ஐயாயிரம் சமையலாள் ஆக்கினர் தளிகைதனை
பத்தாயிரம் சமையலாள் பாகங்கள் செய்தாரே
சோறு சமைக்கும் சுயம்பாகி ஆயிரம்பேர்
குழம்புக்கு ஆயிரம்பேர் கூட்டுசெய்ய ஆயிரம்பேர்
ரசம்வைப்போர் ஆயிரம்பேர் லட்டுசெய்ய ஆயிரம்பேர்
சிலேபிக்கு ஆயிரம்பேர் சித்ரான்னம் ஆயிரம்பேர்
வடைசெய்ய ஆயிரம்பேர் மாப்பிசைய ஆயிரம்பேர்

பாயாசம் ஆயிரம்பேர் பால்காய்ச்ச ஆயிரம்பேர்
அரிசி களைந்ததண்ணீர் ஆறுப்ப் பெருகுதங்கே
பாலாறு நெய்யாறு பார்க்க முடிந்திடுமோ
நூருயிரம் பசுக்கள் நொடிப்பொழுதில் வந்ததங்தே
பசுமந் தையைநிறுத்திப் பாலைக் கறந்தார்கள்
மலைபோல் குவிந்ததுகாண் மாண்புடைய பழவகைகள்
உண்ண முடியவில்லை உண்ணுமல் தீரவில்லை
உண்டு புரண்டார்கள் உலகத்து மக்களெல்லாம்
தின்று புரண்டார்கள் தேசத்து மாந்தரெல்லாம்
கலவைச் சந்தனமும் கற்பூர வாசனையும்
அத்தர்பன் னீர்வகையாம் அடங்காத வாசனைதான்
மூக்கை அடைத்ததுகாண் மூவுலகும் எட்டியது
சங்கீதக் கச்சேரி தனித்தனியே நடக்கிறது
கொன்னக்கோல் வாத்தியமாம் கொற்றவர்கள் போற்றுவ
முகர்சங்கு வாத்தியத்தை மூவர்களும் கேட்டிருப்பார் [து
விகடக்கச் சேரிகளும் வேறுபல காட்சிகளும்
எண்ண முடியுமோ எழுத்தி லடங்குமோ
இத்தனையும் மூன்றுநாள் இனிதா நடந்ததங்கே
மாப்பிளையும் பெண்ணும் மதுரைக்குச் சென்றது
அப்பாலே செல்வபதி அமிர்தவல்லி மாதுடனே
தாயாரும் தந்தையரும் தங்க ளரசருடன்
பாண்டிமா தேவி பாங்கான ராஜாத்தி
சேனை ஜனங்களுடன் திரும்பினர் தென்மதுரை
சோழமன்னர் தேவியுடன் துணைவந்தார் சோபிதமாய்
பாண்டிதேச மக்களெலாம் பயணம்பயண மென்றூர்
எல்லோரு மாக எழுந்து பயணம்வைத்தார்
சீதன சாமான்கள் சிறப்பான நற்சாமான்
நானூறு வண்டிகளில் நன்று அடைந்தார்கள்

ஐநூறு வண்டிகளில் அடைந்தா ரழகாக
வண்டி வருஞ்சத்தம் வானத்தை முட்டியது
செந்தாள் பறந்ததுகாண் திசைகள் தெரியாமல்
மாமதுரைப் பட்டணத்தில் வந்தார் மகிழ்ச்சியுடன்
தென்மதுரைப் பட்டணத்தைச் சேர்ந்தார்க ளெல்லாரும்
கொண்டுவந்து விட்டுக் கொற்றவனும் சோழமன்னன்
தேவியுடன் சென்றூன் சீரான தன்னூர்க்கு
மகிழ்ச்சி யுடன்சென்றூன் மகராஜன் சோழனவன்
காவிரிப்பூம் பட்டினத்தைக் கண்ணுலே பார்த்தானே
காவேரி யாறு கரைபுரண்டு போகுதுகாண்
கரையிரண்டுங் கொள்ளாமல் கனவெள்ளம் போகுதுகா
துன்பம் பொறுக்காமல் துப்பர்கொண்டு ஓடினவர் [ண்
காவிரி நீர்கண்டு களித்து வருகிறுர்கள்
வலசை வாங்கிப்போன மாசனங் ளெல்லோரும்
வந்து புகுந்தார்கள் மாண்புடைய சோழனிலம்
பயிர்கள் வளர்த்தார்கள் பாதைசெப்ப மிட்டார்கள்
துலறமுகத்தைச் செம்மைசெய்து சுத்தப் படுத்தினர்கள்
கப்பல் வியாபாரம் கனக்க நடத்தினர்கள்
மூன்று வருஷத்திலே முன்போல ஆனதுகாண்
சந்தோஷம் கொண்டார்கள் ஜனங்களெல்லா மப்போது
பெண்ணுக்கு அநியாயம் புரிந்ததால் வந்தவினை
மலைபோல வந்தவினை பனிபோல நீங்கியது
ஒருபெண்ணை விதவையென்று உள்வீட்டில் போட்டடை
தேசமெல்லாம் பாழாச்சு சீமையெல்லாம் பாழாச்சு [த்து
பலபெண்ணைப் போட்டடைத்துப் பாதகமே செய்தாக்கால்
தாங்க முடிந்திடுமோ தருமம் நிலைத்திடுமோ
ஒருபெண் அழுததால் உலகம் அழிந்ததுகாண்
பலபெண் அழுதாக்கால் பாழாதற் கென்னதடை

என்று பலர்பேசி இருந்தார்கள் அந்நாளில்
பெண்கள் அழுகைப் பேச்சுவரக் கூடாது
ஒப்பாரிச் சத்தம் ஊரில்வரக் கூடாது
பெண்ணே அழவைத்தால் பிழிவேன் அவருடம்பை
பெண்ணுக்குத் தீங்கு புரிவார்கள் தந்தலையை
வெட்டித் தெருவில் விதவிதமாய்த் தொங்கவைப்பேன்
என்று கடும்சட்டம் இயற்றினான் சோழமன்னன்
மழையும் பொழிந்ததுகாண் வானம் இடிக்கவில்லை
சூரை வளிக்காற்று சொல்லாமல் ஓடியது
தென்றல் உலாவியது தேசம் செழித்ததுகாண்
துன்பம் தொலைந்தது சுகவாழ்வு மேலாச்சு
அமிர்தவல்லி தனைப்போல அழகான படமெழுதி
வீடுகள் தோறும் விதவிதமாத் தூக்கிவைத்தார்
காலையிலும் மாலையிலும் கண்டுதொழு கின்றார்கள்
மாலையிலும காலையிலும் வணங்கி மகிழ்ந்தார்கள்

அமிர்தவல்லியின் சந்தோஷ வாழ்வு

மாப்பிளையும் பெண்ணும் மதுரைவந்து சேர்ந்தார்கள்
வாழ்வு நடத்தினார்கள் மனக்கசப்பொன் றில்லாமல்
மானும் மயிலும்போல் மங்கையங்கு வாழலுற்றாள்
அமிர்தவல்லி பேர்சொன்னால் அனைவர்க்கும் கரும்பாகும்
சர்க்கரையின் கட்டிபோல் தானிருந்தாள் அமிர்தவல்லி
செந்திருவைப் போல சீர்பெற்றாள் அமிர்தவல்லி
செல்வபதி யெண்ணமெல்லாம் சேரப் பறிகொடுத்தான்
அமிர்தவல்லி யென்றால் அப்படியே சொக்கிடுவான்
செல்வபதி பேர்கேட்டால் திசையறியாள் மாதுநல்லாள்
வாலிபச் செல்வம் வளமாகப் பெற்றவர்கள்
குறையில்லாச் செல்வத்தைக் கூடியே பெற்றார்கள்
அழகு மிகுந்தார்கள் அறிவு சிறந்தார்கள்

செல்வம் மிகுந்தார்கள் சிறப்பு நிறைந்தார்கள்
இருவரும் ஒருவராம் இன்பம் அடைந்தார்கள்
கவலையில்லாச் செல்வர்களாக் காதலர்கள் வாழ்ந்தார்
காதல் சிறந்து களிக்கு மிருவரையும்
மாமியும் மாமனும் வாழ்த்தி மகிழ்ந்தார்கள்
ஒருநாள் பிரியாமல் உடலொன்று வாழ்ந்தாரே
உண்மைப் பெருங்காதல் உயிரொன்றுச் செய்ததுகா
மணமுடித்து நின்ற மாதமொரு பன்னிரண்டாம்
மணவாளன் வீடுசென்று வருஷமொன்று ஆகையி
அமிர்தவல்லிப் பெண்ணரசி ஆண்குழந்தை பெற்று
அமிர்தம்போல் பெற்றெடுத்தாள் அழகான ஆண்
தங்கநிறமும் தாமரைப்பூ மேனியுமாய்
ராஜ லட்சணமுள்ள ரத்தினம்போல் பிள்ளையது
வைத்து மடியிருத்தி வாழ்த்துகிறு ரெல்லாரும்
உலகமெலாம் போற்ற உத்தமியும் வாழ்ந்திருந்தாள்
எல்லாரும் சந்தோஷம் ஏகமாக் கொண்டார்கள்
ஊரெல்லாம் சந்தோஷம் உலகமெல்லாம் சந்தோ
தேசமெல்லாம் சந்தோஷம் செகமெல்லாம் சந்தோ
சந்தோஷம் சந்தோஷம் தரணியெல்லாம் சந்தோ

முற்றிற்று.

50500